



ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா.

மலர் 23 } டிசம்பர் 1961 { இதழ் 12


# மதிப்பீட்டுக் குழுவின் மாண்புமிக்க அறிக்கை

10—12—61 அன்று தமிழ் நாட்டுச் சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அந்தச் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை, தமிழ் நாட்டுக் கல்வி உலகத்திற்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய ஒரு கருவூலமாகத் திகழ்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. இன்றைய தினம் தமிழ் நாட்டுக் கல்வித் துறையில் அலைமோதிக் கொண்டிருக்கும் சிக்கலான பிரச்சினைகள் பலவற்றை வரிசையாகக் கொண்டு வந்து நிறுத்தி, அவை ஒவ்வொன்றையும் தெள்ளத் தெளிவாக அலசி ஆராய்ந்து, ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்த்துவைப்பதற்குரிய வழிமுறை இன்னது என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது அந்த மதிப்பீட்டுக் குழு. 1947 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து இந்தியத் துணைக்கண்டம் விடுதலை பெற்ற அந்த நாள் முதல்,

போர்ச்சுகீசியக் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து கோவா—டையூ—டாமன் ஆகிய பகுதிகள் விடுவிக்கப்பெற்றுச் சுதந்தர வாழ்வை நுகரத் தொடங்கியுள்ள இந்த நாள் வரை, தமிழ் நாட்டுக் கல்வித் துறையைப்பற்றி எத்தனையோ குழுக்கள் அமைக்கப்பெற்று எத்தனையோ அறிக்கைகள் வெளியாகியுள்ளன. ஆனால் அந்த அறிக்கைகள் அத்தனையையும் மிஞ்சக்கூடிய செம்மையையும் சிறப்பையும் தெளிவையும் திறமையையும் தன்னகத்தே பெற்றுள்ளது மதிப்பீட்டுக் குழு. உண்மை முழுவதையும் ஒரே வாக்கியத்தில் சுருக்கமான முறையில் இயம்ப வேண்டுமானால், இணையற்ற சிறப்புடைய ஒப்பற்ற அறிக்கை இது என்றே தெரிவித்தல் வேண்டும்.

தமிழ் நாட்டு அரசாங்கக் கல்வி இலாகாவை முழுமையான அளவில் சீரமைப்புச் செய்து நிர்வாகத்தை அதிக அளவு பரவலாக்க வேண்டும் என்பது மதிப்பீட்டுக் குழுவினர் தெரிவித்துள்ள இன்றியமையாத கருத்துரைகளில் ஒன்றாகும். தமிழ் நாட்டுக் கல்வித் துறைப் பிரச்சினைகள் யாவற்றையும் கவனிக்கத் தற்போது ஒரு நெறியாளர் (டைரக்டர்) மட்டுமே இருக்கிறார் அல்லவா? இந்த நிலையை மாற்றி மூன்று நெறியாளர்களை நியமித்தல் வேண்டும் என்றும், அவர்களில் ஒருவர் ஆரம்பக் கல்வி நெறியாளர் என்று அழைக்கப்பட வேண்டும் என்றும், அவரிடம் முதல் வகுப்பு முதல் ஏழாவது வகுப்பு வரை உள்ள கல்வி விவகாரங்கள் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்றும், மற்றொரு நெறியாளர் நடுத்தரக் கல்வி நெறியாளர் என்று அழைக்கப்பட்டு அவரிடம் எட்டாவது வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரை உள்ள பொறுப்புகள் அளிக்கப்படவேண்டும் என்றும், இன்னொரு நெறியாளர் கல்லூரிக் கல்வி நெறியாளர் என்று அழைக்கப்பட்டு அவரிடம் அரசினர் கல்லூரிகள், பல்கலைக் கழகக் கல்வி ஆகிய பிரச்சினைகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் மதிப்பீட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் தவறாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமையாத சிபார்சு இது என்பது நம்முடைய கருத்தாகும்.

கல்வித் துறை முழுவதையும் கவனிக்க ஒரே ஒரு நெறியாளர் இருப்பது என்னும் தற்போதைய ஏற்பாடு நீண்ட பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிலைமை ஆகும். இந்த ஏற்பாடு உருவாக்கப்பட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் இருந்த ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அந்தப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியப் பெருமக்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது. இத்தகைய நிலையில் இந்த மூவகைக் கல்வித் துறைகளின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஒரே ஒரு நெறியாளரால் தக்க முறையில் அலசி ஆராய்ந்து கவனித்துப் பார்க்க முடிந்தது.

ஆனால் இந்தக் காலத்தில் உள்ள நிலைமையோ முற்றிலும் வேறுபட்டதாக ஆகிவிட்டது. ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கையும் சரி, உயர்நிலைப் பள்ளிகளின் தொகையும் சரி, கல்லூரிகளின் எண்ணிக்கையும் சரி, இதற்குமுன் நாம் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாத அளவுக்கு வளர்ந்து போயிருக்கின்றன. இந்தக் கல்வி நிலையங்களில் பணியாற்றி வரும் ஆசிரியர்களின் தொகையும் பலமடங்கு வளர்ந்து போயிருக்கிறது. கல்வி நிலையங்களின் எண்ணிக்கை, அங்கே பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, அவர்களிடம் கல்விப் பயிற்சியைப் பெற்றுவரும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகிய மூன்றும் எதிர்பாராத அளவுக்கு வளர்ந்துபோயுள்ள காரணத்தால் அவற்றைச் சுற்றிச் சூழ்ந்து எழக்கூடிய பிரச்சினைகளின் அளவும் வளர்ந்திருக்கிறது; எண்ணிக்கையும் பெருகியிருக்கிறது; குழப்பமும் கூடியிருக்கிறது. கல்வித் துறைப் பிரச்சினைகள் இந்த அளவு பல்கிப் பெருகி வளர்ந்து போயுள்ள இன்றைய நிலையிலும் கல்வித் துறை நெறியாளர் ஒருவர்மட்டுமே இருப்பாரானால்-அவர் எவ்வளவுதான் அறிவாற்றல் மிக்கவராக இருந்தாலும்—அவருடைய திறமையும் தகுதியும் எவ்வளவுதான் சிறப்பு மிக்கவையாக ஒளி வீசித் திகழ்ந்தாலும்—அவரால் எல்லாப் பிரச்சினைகளையும் போதுமான கவனத்தோடு அலசிப் பார்த்துச் சிறந்த முறையில் முடிவெடுத்து, அப்படி எடுக்கப்பட்ட முடிவுகளைத் தக்க முறையில் நடைமுறைப்படுத்துவது என்பது இயலாத செயலே ஆகும்.

கல்வித் துறையைப்பற்றிய பிரச்சினைகளின் மொத்த எண்ணிக்கை, ஒரே ஒரு நெறியாளரால் கவனிக்கப்பட முடியாத அளவுக்கு வளர்ந்து போயிருக்கிறது என்பதுமட்டுமல்ல இங்கே கவனிக்கப்பட வேண்டிய உண்மை. ஆரம்பக் கல்வி—நடுத்தரக் கல்வி—கல்லூரிக் கல்வி ஆகிய மூவகைக் கல்வித் துறைகளின் பிரச்சினைகள் மூவேறு வகைப்பட்டனவாகும். ஆரம்பக் கல்வியை ஒட்டி எழுகின்ற பிரச்சினைகளின் உள்ளடக்கமும் சிக்கலும் பரிகாரமும் ஒருவகையானவை என்றால் உயர்நிலைப் பள்ளிக் கல்வித் தொடர்பாகத் தோன்றுகின்ற பிரச்சினைகளின் தன்மையும் நிலைமையும் போக்கும் முற்றிலும் வேறுவகையானவை. கல்லூரிக் கல்வியின் நோக்கும் போக்குமோ இந்த இருவகைக் கல்வித் துறைகளிலிருந்து மாறுபட்டவை. இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மூவகைக் கல்வி நிலைகளுக்கு மூன்று நெறியாளர்களை அமைப்பது என்னும் பரிந்துரை மிகச் சிறந்த பரிந்துரை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுதானே ஆகவேண்டும்?

ஆரம்பக் கல்வி நெறியாளர், நடுத்தரக் கல்வி நெறியாளர் ஆகிய இருவருக்கும் ஆலோசனைகூற ஆரம்பக் கல்விக் குழு, நடுத்தரக் கல்விக் குழு ஆகிய இரண்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்

கட்டப்பட வேண்டும் என்பதும், அந்தக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் கல்வித் துறைவல்லுநர்கள், அனுபவம் மிகுந்த ஆசிரியர்கள், கல்வி நிலைய நிர்வாகிகள், கல்வித்துறை அதிகாரிகள் முதலியோர் இடம் பெறவேண்டும் என்பதும், ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை பதினெட்டாக இருக்கலாம் என்பதும், மதிப்பீட்டுக் குழுவினர் தந்துள்ள மற்றொரு சிபார்சின் விளக்கங்கள் ஆகும். கல்விப் பிரச்சினைகளில் ஆட்சியாளர்களுக்குத் தேவையான ஆலோசனையை அளிக்கும் திறமையும் தகுதியும் படைத்த கல்விக் குழுக்கள், 1929-ஆம் ஆண்டு வரை இந்த மாநிலத்தில் மிகச் சிறப்பாக இயங்கி வந்தன. என்ன காரணத்தாலோ தெரியவில்லை, அந்த ஆண்டில் அந்தக் குழுக்கள் யாவும் கலைக்கப் பட்டுவிட்டன. தமிழ் நாட்டுக் கல்வித் துறையானது ஓங்குபுகழ் எய்தி ஒளி வீசித் திகழ வேண்டுமானால் அத்தகைய கல்விக் குழுக்கள் மீண்டும் உருவாக்கப்பட்டே தீரவேண்டும் என்று நம் "ஆரம்பக்கல்வி" இதழின் வாயிலாக நாம் சென்ற பத்தாண்டுகளாக மீண்டும் மீண்டும் வற்புறுத்தி எழுதி வருவதை வாசக நண்பர்கள் நன்கறிவார்கள். இங்கிலாந்து நாட்டில் இத்தகைய கல்விக் குழுக்கள், மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு, மிகஉயர்ந்த வகையில் பணிபுரிந்து வருகின்றன. இத்தகைய கல்விக் குழுக்கள் இல்லாத நிலையில், கல்வித்துறை நெறியாளரால், ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றித் தன்னுடைய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் எத்தகைய கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும்தான் தெரிந்துகொள்ள முடிகிறதே தவிர அந்தப் பிரச்சினையைப்பற்றி ஆசிரியர்களின் கருத்து என்ன, நிர்வாகிகளின் எண்ணம் யாது, நிபுணர்களின் ஆய்வுரை எத்தன்மையது என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஆசிரியர்கள்—நிர்வாகிகள்—நிபுணர்கள் — அதிகாரிகள் ஆகிய நான்கு சாராரும் ஒருவரை ஒருவர் நேரில் காணவும், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும், பிரச்சினைகளை அலசி ஆராயவும், சிறந்த முடிவுகளை உருவாக்கவும் மட்டற்ற துணைபுரியும் மாண்புமிக்க அமைப்புகளாக விளங்கத் தக்கவை இந்தக் கல்விக் குழுக்களே ஆகும். ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இன்றைய ஆட்சி முறையில் இத்தகைய குழுக்கள் எவ்வளவு இன்றியமையாதன என்பதை எடுத்து விளக்க ஆராய்ச்சியா தேவை? மதிப்பீட்டுக் குழுவினரின் இந்தப் பரிந்துரை மிக மிக நியாயமான ஒன்று என்பதை யார் தானாகட்டும், எப்படி மறுத்துவிடமுடியும்?

பள்ளிக்கூடங்களுக்கான பாட புத்தகங்கள் பலவற்றைத் தாங்களே வெளியிடுவது என்கிற ஒரு திட்டத்தை அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருக்கிறார்

கள் அல்லவா? இந்தத் திட்டம் முற்றிலும் தவறானது என்பதை யும், இந்தத் தேவையற்ற திட்டத்தால் தீமை நிறைந்த விளைவுகளே உருவாகும் என்பதையும் மதிப்பீட்டுக் குழுவினர் திட்டவட்டமாக எடுத்துக் கூறியுள்ளனர். பாடப்புத்தகங்களை அரசினரின் ஏகபோக உடைமையாக்குவதால் மக்களின் சிந்தனைக்குக் கட்டுப்பாடு விதிக்கப் படுகிற விபரீத நிலைமை உருவாகிவிடும் என்றும், கல்வியின் அடிப் படை நோக்கத்துக்கே இடையூறு ஏற்பட்டுவிடும் என்றும் மதிப் பீட்டுக் குழுவினர் அழுத்தந்திருத்தமாக இயம்பியுள்ளனர்.

பாடபுத்தகங்களைத் தனிப்பட்ட பதிப்பகங்கள் வெளியிடுகிற சூழ்நிலையில், ஒரே வகுப்புக்குரிய ஒரே பாடத்திற்குப் பல்வேறு பதிப்பகங்கள் பல்வேறு ஆசிரியர்களைக் கொண்டு பல நூல்களை வெளியிட முடிகிறது. இந்த முறையின் விளைவாகப் பல்வேறு ஆசிரியர்களின் நீண்ட கால அனுபவம் — தனித்தனித் திறமை — வெவ்வேறு வகை எழுத்தாற்றல் ஆகியவற்றின் பயனை நாடு பெற்று மகிழ முடிகிறது. நிலைமை இப்படி இருப்பதற்கு மாறாக அரசி னரே பாட நூல்களை வெளியிடுகிற நிலைமை உருவாகுமானால், ஒவ் வொரு வகுப்புக்கும் உரிய ஒவ்வொரு பாடத்திற்கும் அரசினர் யாரேனும் ஓர் ஆசிரியரைக்கொண்டு எழுதப்பட்ட ஒரே ஒரு நூலை மட்டுமே வெளியிடுவர். இதனால் பல்வேறு ஆசிரியர்களின் பல வகைத் திறமைகளும் எழுத்தாற்றலும் வெளிப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல போகும். வெவ்வேறு ஆசிரியர்களின் தனித் தனித் திறமைகளின் பயனைப் பெற்று வளர்கிற அரிய வாய்ப்பு மாணவ உலகத்திற்கும் கிடைக்காமற்போகும். ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் எவ்வளவுதான் அறிவிலும் ஆற்றலிலும் தலைசிறந்தவராக இருந்தா லும், பல்வேறு ஆசிரியர்கள் இயற்றுகின்ற பலதிற நூல்களில் காணப்படுகின்ற சிறப்பு முழுவதையும் அவர் ஒருவர் மட்டுமே இயற்றுகின்ற நூலில் அமைத்து விடுவது என்பது ஒரு நாளும் முடியாத செயலே ஆகும்.

பற்பல பதிப்பகங்கள் நூல்களை வெளியிடுகிற இன்றைய நிலையில், பள்ளிக்கூட ஆசிரியர்கள், தத்தம் வட்டாரத்திற்கும் மாணவர்களின் மனப் பக்குவத்திற்கும் ஏற்ற நூலகளைத் தேர்ந் தெடுத்துக் தங்கள் பள்ளிக்கூடங்களின் பாட நூல்களாக அமைக்க முடிகிறது. ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு நூல்தான் வெளியாகும். —அதனையும் அரசினர்தான் வெளியிடுவார்கள் என்கிற நிலைமை ஏற்படும்போது, பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு உள்ள பாட நூல் களைத் தேர்ந்தெடுக்கும் இந்த சுதந்தரம் பறிபோய்விடும்.

பாட நூல்களை அரசினரே வெளியிடுவதால் மற்றொரு பெரிய ஆபத்து ஏற்படும் என்பதும் உறுதியாகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எந்தக் கட்சி ஆட்சிப் பீடத்தில் இடம்பெற்றுள்ளதோ

அந்தக் கட்சியின் மறைமுகப் பிரசாரக் கருவிகளாக இந்தப் பாட நூல்கள் ஆக்கப்படக்கூடும். அந்தக் கட்சியின் தலைவர்கள் பற்றிய பாடங்கள், கொள்கைகள் பற்றிய விளக்கங்கள் முதலியன மறைமுகமாகவாவது அந்த நூல்களில் இடம் பெற்றுவிடக்கூடும். அரசினரால் நியமிக்கப்படுகிற ஓர் ஆசிரியர், அரசினருக்காக ஒரு புத்தகத்தை எழுதும்போது அரசினருக்குப் பிடித்தமான கருத்துக்களை மட்டுமே அதில் அமைத்து எழுதுவதும், அவர்களுக்குப் பிடிக்காத கருத்துக்களை ஒதுக்குவதும் இயல்பே அல்லவா ?

ஜனநாயகக் கோட்பாடு வலிவும் பொலிவும் மிகுந்ததாகத் திகழ வேண்டுமானால் கட்டுக் காவலற்ற சிந்தனைச் சுதந்தரம் மக்களுக்கு இருந்தாக வேண்டும். சிந்தனைச் சுதந்தரம் என்னும் அடிப்படை மீது எழுப்பப்பட்ட எழில்மிகு மாளிகையே ஜனநாயகக் கோட்பாடு என்னும் ஏற்றம் மிக்க கொள்கை. இவ்வளவு இன்றியமையாத சிறப்பு வாய்ந்த சிந்தனைச் சுதந்தரத்தைத்தான் வேட்டு வைத்துத் தகர்ப்பதாக அமைந்துள்ளது பாடநூற்களை அரசினரே வெளியிடும் ஏற்பாடு. ஆகவேதான் இந்த ஏற்பாட்டைக் கைவிட்டாக வேண்டும் என்று ஆய்வுரை தந்துள்ளது மதிப்பீட்டுக் குழு.

நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஏராளமான பள்ளிக்கூடங்கள் தேவைப்படுவதால் தனியார் நிர்வாகங்களுக்கு மேலும் புதிய பள்ளிகளைத் தொடங்குவதற்குரிய ஊக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு அரசினர் தாராளமாக உதவி அளிக்க வேண்டும் என்றும் மதிப்பீட்டுக் குழுவினர் மற்றோர் கருத்துரை புகன்றுள்ளனர். இந்தக் கருத்துரையை வெறும் கருத்துரை என்று கூறுவதைவிடத் தமிழ் நாட்டு அரசாங்கத்தார் உடனடியாக ஏற்றுக்கொள்ளவேண்டிய பொன்னுரை என்று கூறுவதே மிகப் பொருத்தமாக இருக்கும்.

ஆரம்பக்கல்வியோ, உயர்நிலைப்பள்ளிக் கல்வியோ, கல்லூரிக் கல்வியோ, எந்தத் துறைக் கல்வியானாலும், அந்தக்கல்வி இன்றைய தினம் உள்ள அளவுக்கு வளர்ந்து ஓங்கிச் செழித்து இருப்பதற்கான தலைசிறந்த காரணகர்த்தாக்கள் தனியார் நிர்வாகிகளே என்பது எவராலும் மறுக்கமுடியாத எழில்மிக்க "உண்மையாகும். குறிப்பாகவும் சிறப்பாகவும் ஆரம்பக் கல்வியைப்" பொறுத்த அளவில், அரசாங்கத்தாரும் உள்ளாட்சி மன்றங்களும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க வேண்டும் என்கிற எண்ணத்தையே பெறாமல் இருந்த நீண்ட நெடுநாட்களுக்கு முன்னரே ஆரம்பப் பள்ளிகளைத் துணிந்து தொடங்கியவர்கள் தனியார் நிர்வாகிகள். கல்விப் பொருளின் அருமை பெருமையை நன்கறிந்து, தத்தம் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் எப்பாடுபட்டாவது கல்விப் பொருளைப் பெற்றுத் தந்தாக வேண்டும் என்று பெற்றோர்கள் ஒவ்வொருவரும் துடிதுடிக்கிற இந்தக்

காலம் போன்றது அல்ல தனியார் நிர்வாகிகள் பள்ளிகளைத் தொடங்கிய அந்தக் காலம். கல்வியா—எங்கள் பிள்ளைகளுக்கா — வேண்டாமய்யா வேண்டாம் என்று என்னற்ற பெற்றோர்கள், கல்வி என்ற பேச்சைக் கேட்டவுடனே வெறுப்புடன் பேசி எரிச்சலுடன் ஒதுக்கித் தள்ளிய காலம் அது. அத்தகைய காலத்தில் அஞ்சாத நெஞ்சத்துடனும் அசையாத உறுதியுடனும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி நடத்திய தனியார் நிர்வாகிகளுக்கு மேலும் மேலும் ஊக்கம் அளித்து அத்தகைய பள்ளிகள் மேலும் பல தோன்றுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால் ஏனோ தெரியவில்லை, சென்ற சில ஆண்டுகளாகவே, தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள், உதவிபெறும் தனியார் பள்ளிகளுக்கு ஏற்கெனவே தந்துவந்த உதவித் தொகையின் அளவை மிக மிகச் சிறியதாகச் சுருக்கிவிட்டார்கள். இதன் விளைவாக ஏராளமான ஆரம்பப் பள்ளிகள் இந்நாளில் பயங்கரமான பொருளாதார நெருக்கடியின் இரும்புப் பிடியில் சிக்குண்டு செய்வகை அறியாது தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இருந்து வருகின்ற தனியார் பள்ளிகளின் நிலைமையே இவ்வளவு பரிதாபமாக இருக்கும்போது புதிதாக எந்தத் தனியார் வந்து புதிய பள்ளிகளைத் தொடங்க முனைவார்கள்? அந்த விசித்திரமான சூழ்நிலையின் முழு வடிவத்தையும் நன்றாக உணர்ந்த காரணத்தால்தான், மதிப்பீட்டுக் குழுவினர், தனியார் நிர்வாகத்திற்குத் தாராளமாக நிதி உதவி அளிக்கும் கொள்கையை அரசினர் மேற்கொள்ள வேண்டும் என்றும், அப்படி மேற்கொண்டால்தான் ஏராளமான புதிய பள்ளிகள் தொடக்கமாகும் என்றும், அப்படித் தொடக்கமானால்தான் கல்வியின் வளர்ச்சியானது விரைவுமிக்கதாக இருக்கமுடியும் என்றும் தெளிவுரை பகர்ந்துள்ளனர்.

ஆதாரக் கல்வியைப்பற்றி மதிப்பீட்டுக் குழுவினர் தெரிவித்துள்ள கருத்துரையும், பொன்னேபோல் போற்றிப் பாராட்டத் தக்கதாக மட்டுமல்ல, உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய சிறப்புவாய்ந்ததாகவும் அமைந்துள்ளது. ஆதாரக் கல்வியின் நோக்கங்கள், ஏட்டளவில் சிறந்தவையாக இருந்தபோதிலும் ஏற்கெனவே காணப்பட்ட அநேக சங்கடங்கள் காரணமாக அவை நடைமுறையில் நிறைவேற்றக்கூடியவையாக இல்லை என்று மதிப்பீட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். உண்மைதானே! ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தேவையான பணம் முழுவதையும் அங்குப் பயிலும் மாணவர்கள் அவர்கள் பெறுகின்ற கல்வியின் மூலமாகவே திரட்டிவிடவேண்டும் என்கிற அடிப்படை நோக்கத்தை இதுவரை எந்த ஆதாரப் பள்ளியும் நிறைவேற்றியதாகத் தெரியவில்லை அல்லவா? ஒருநாளும் நிறைவேற்ற முடியாத

இத்தகைய நோக்கங்களைக் கொண்ட ஆதாரக் கல்விக்காக மேலும் மேலும் பணத்தைச் செலவழிப்பது பயனற்ற செயலே என்பதில் ஐயம் ஏது? எனவேதான், ஆதாரக் கல்வி என்கிற தனித் திட்டத்தைக் கைவிட்டுவிட வேண்டும் என்றும், தற்போது நடைமுறையில் உள்ள ஆரம்பக் கல்வித் திட்டத்திலேயே அந்தந்த வட்டாரத்தில் உள்ளதைத்தொழில்களில் பயிற்சியளிக்கும் பாடம் ஒன்றை இணைத்துக் கொண்டால் போதும் என்றும், அப்படிச் செய்வதன் மூலம் மிச்சமாகும் .பணத்தைக் கொண்டு கல்வி நிலையங்களுக்கு அதிக நிதிவசதிகளை ஏற்படுத்தித்தந்து அவற்றைச் சிறந்த முறையில் பணியாற்றச் செய்யலாம் என்றும் மதிப்பீட்டுக் குழு தெரிவித்திருக்கிறது. ஆமாம் அதுதான் சரி என்று, நாம் மட்டுமல்ல, ஆரம்பக் கல்வித் துறையில் நீண்ட கால அநுபவம் படைத்த அத்தனைப் பேரும் கூறுவர் என்பதில் துளியும் ஐயமில்லை.

அருமையான ஆய்வுரைகளை அணி அணியாகத் தந்துள்ளது தமிழகச் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு. அடுத்த பிப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்குப்பின்னர் அமைகிற தமிழ் நாட்டு அமைச்சரவை அந்த ஆய்வுரைகளை அன்போடு ஏற்றுக் தேவையான முறையில் அவற்றை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்பது நம் கருத்து ; வேண்டுகோள் ; ஆவல்.

---

## தெரிந்தவை என்றாலும்...!

1. **மின்சார அதிர்ச்சிக்கு முதலுதவி:** *மின்சாரம் மிக அபாயமானது. மின்சாரக் கம்பியைத் தொட்டால் அது ஆளை இழுத்துப் பிடித்துக்கொள்ளும். உடனே மின்சார நிலயத்திற்கு மின்சார ஓட்டத்தை நிறுத்தும்படி தொலைவு பேசியில் சொல்ல வேண்டும். அல்லது அனுபவம் வாய்ந்த மின்சாரத் தொழிலாளியின் மூலம் ஆளை மீட்கவேண்டும்; மின்சாரக் கம்பி, ஆளின் உடை, உடல் ஆகிய ஒன்றையேனும் தொடுதலாகாது. சிறிதும் ஈரமில்லாத தடி அல்லது பலகைகளால் கம்பியைத் தள்ளிவிடலாம். மின் ஓட்டம் நிற்பாட்டப் பட்டவுடன் அல்லது மின்சாரத் தொழிலாளி ஆளை வெளியே எடுத்தபின் நீரில் மூழ்கியவனுக்குச் செயற்கைச் சுவாசமளிக்கச் செய்வதுபோன்ற முதலுதவி செய்தல் வேண்டும்.*

2. **மனிதனின் நாடித் துடிப்புகள்:** *பிறந்தவுடன் குழந்தைக்கு நிமிடத்தில் 130 முதல் 140 முறையும், ஒரு வயதில் 115 முதல் 130 முறையும் 2-ஆம் வயதில் 95 முதல் 110 முறையும், 3-ஆம் வயதில் 85 முதல் 95 முறையும். 7 முதல் 14-ஆம் வயது வரை 80 முதல் 90 முறையும், வளர்ந்தவர்களுக்கு 70 முதல் 75 வரையும், வயது சென்றவருக்கு 60 முதல் 75 வரையும் நாடித் துடிப்பிருக்கும்.*

**போதனு விஷயப் பூங்கொத்து**

# முதியோர் கல்விக்குப் பெரும் பணி புரியும் எழுத்தறிவுக் கிராமம்

பத்தொன்பதாவது நூற்றாண்டில் கிரிமியாவில் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் நர்ஸ் பணிக்குச் செய்த சேவையை இன்றைக்கு லக்ஷ்மணபுரியில் வெல்தி பிஷர் முதியோர் கல்விக்குச் செய்து வருகிறார்.

தடமற்ற காட்டில் வழியமைக்கும் தகைமையுடையவர் திருமதி வெல்தி பிஷர். உத்தரப் பிரதேசத்தின் மூலை முடுக்கிலுள்ள கிராமங்களுக்கெல்லாம் எழுத்தறிவைப் பரப்பி வழி காட்டியுள்ளார் இவர். 1953ல் அலகாபாத் வேளாண்மை நிலையத்தில் சிறியதாகத் தொடங்கிய இவரது பணியின் மூலம் இன்றுவரை 4,000 ஆசிரியர் முதியோர் கல்வித் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளனர்.

லக்ஷ்மணபுரிக்கு அருகே "எழுத்தறிவுக் கிராமம்" என்பதொன்று இருக்கிறது. இங்கு முதல் கட்டடம் 1958ல் கட்டி முடிக்கப்பட்டது.

எழுத்தறிவுக் கிராமத்தின் பணி வளரப் பணம் தேவையாயிற்று. அதன் சிறப்பை உணர்ந்த அமெரிக்க அரசாங்கம் அண்மையில் 7,20,000 ரூபாய் வழங்கியது.

இருபதாம் நூற்றாண்டு இந்தியாவின் உயிருள்ள சின்னம் எழுத்தறிவுக் கிராமம்.

கல்வியைப் பரப்புவதையே தங்கள் வாழ்க்கைப் பணியாகக் கொண்ட எழுத்தறிவுக் கிராம மாணவ - ஆசிரியர்கள் மாலை நேரம் ஆனதும் பாலர் பாடப் புத்தகம் ஒன்றையும் விளக்கு ஒன்றையும் கையிலெடுத்துக் கொண்டு கிராமங்களுக்குச் சென்று பெரியவர்களுக்கு எழுதப்படிக்கச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இளம் பெற்றோர்களையே இவர்கள் முக்கியமாகக் கருதுகிறார்கள்; ஏனெனில் படிப்பில் அவர்களுக்கு அக்கறை ஏற்பட்டால், அது அவர்கள் குழந்தைகளுக்கும் பரவும்.

எழுத்து, கணக்கு, தையல், குடும்பக் கட்டுப்பாடு முறை ஆகியவற்றில் பெண்களுக்குச் சுருங்கிய காலப் பயிற்சி ஒன்று புதிதாக எழுத்தறிவுக் கிராமத்தில் நடைபெறுகிறது. இப் பயிற்சியில் தேர்ந்தவர்கள் கிராமங்களில் ஆசிரியர்களாகவும் நர்ஸுகளாகவும் பணியாற்றுகிறார்கள்.

புதிதாகப் படிக்கத் தெரிந்த பெரியவர்களுக்காகப் புத்தகங்கள் எழுதத் தக்க எழுத்தாளர்

களைப் பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடம் ஒன்று எழுத்தறிவுக் கிராமத்தில் நடக்கிறது. எளிய இந்தியில் எழுதப்படும் வார இதழ் ஒன்று வெளியிடப்படுகிறது. உடல் நலம், சத்துணவு, குழந்தை வளர்ப்பு, துப்புரவு முதலியவற்றில் பல புத்தகங்களும் சிறு வெளியீடுகளும் வெளியாகின்றன. மூன்று சிறு வெளியீடுகள் இந்திய அரசாங்கத்தின் பரிசுகள் பெற்றுள்ளன. புதிதாகப் படிக்கத் தெரிந்த பெரியவர்களுக்கு எழுத்தறிவு விட்டுப் போகாமல் இருக்க இந்தப் புத்தகங்கள் நன்கு உதவுவனவாகும்.

எழுத்தறிவுக் கிராமத்தின் பதிப்பகம் இன்னும் பெரிதாக்கப் படும். ஆண்டு பிலிம்கள், பொம்மலாட்டப் பொம்மைகள், ஒலிப்பதிவு நாடகங்கள் போன்ற கல்வி உபகரணங்களை உற்பத்தி செய்யும் உற்பத்திச் சாலை ஒன்றும் உருவாக்கப்படும். அமெரிக்க அரசாங்க மானியம் இவ் வேலைகளுக்கும் மற்றும் நிர்வாகச் செலவு, ஊழியர் ஊதியம் ஆகியவற்றுக்கும் செலவிடப்படும்.

1906ல் அமெரிக்காவில் எங்கிள்வுட் என்னும் இடத்திலிருந்து வெல்தி ஹான்ஸிங்கர் என்னும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கு நான்சாங் நகரில் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி, அங்கேயே 11 ஆண்டுகள் பணியாற்றினார். 1924ல் அவருக்கும் பிரடெரிக் பான் பிஷர் என்பவருக்கும் திருமணம் நடந்தது. இவர் கல்கத்தாவுக்கும் பர்மாவுக்கும் மெதடிஸ்ட் பிஷப். இவர்கள் இருவரும் இந்திய மக்கள் நலனுக்காக உழைத்து வந்தனர். 1939-ல் பிஷர் காலமானார்.

திருமதி பிஷர் காந்திஜியின் இயக்கத்தில் நெடுநாட்களாகவே ஈடுபட்டவர். 1947 இறுதியில் ஒருநாள் அவர் காந்திஜியைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார். "இந்தியாவுக்கு நீங்கள் ஏதாவது உதவி செய்யவேண்டும் என்றால், எங்கள் கிராமவாசிகளுக்கு உதவுங்கள். அவர்களுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுங்கள்" என்றார் காந்திஜி.

ஆம், அதன்படியே திருமதி பிஷர் அமைத்த எழுத்தறிவுக் கிராமத்தின் ஆசிரியர்கள் மண் குடிசைகளில் வாழும் ஒரு லட்சம் மக்களுக்கு இதுவரை எழுத்தறிவு ஊட்டிவிட்டனர்.

அவர் தாம் உருவாக்கிய எழுத்தறிவுக் கிராமத்தின் எழிலொழுகும் வகுப்பறைகளையும், திறந்த வெளியரங்கத்தையும், நூலகத்தையும், மாணவர் விடுதிகளையும், எல்லாவற்றுக்கும் மேலாக இதன் பணியினால் எழுத்தறிவு பெற்ற கிராமவாசிகளின் இன்முகங்களையும் கண்டு பெருமை கொள்ளலாம்.

# பாரசீகம்

இந்தியாவுக்கும் பாரசீகத்திற்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மொகலாயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பாரசீக பாஷை சர்க்கார் மொழியாக இருந்திருக்கிறது. பாரசீகத்தில் முடியாட்சி இருக்கிறதென்றாலும் மக்களின் இஷ்டத்திற்கு ஏற்ப மக்கள் அபிமானத்தை ஏற்றே அங்கு மன்னர் ஆட்சி நடத்துகிறார்.

பாரசீகத்தில் ஜாதிவித்தியாசம் எதுவும் கிடையாது. தீண்டாமை, வகுப்புப் பூசல், மொழிப்பிரச்னை எதுவும் கிடையாது.

*இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி ஏற்படும் முன்பே இவ்விரு நாடுகளுக்கும் தொடர்பு இருந்து வந்ததென்பது உண்மை என்றாலும் முஸ்லீம் ஆட்சியின் போது தான் இரு நாடுகளுக்குமிடையே ஐக்யம் ஏற்பட்டது.*

*சுமார் 700 வருஷங்களாகப் பாரசீக மொழி இந்தியாவில் பேசப்பட்டது காரணமாக எல்லா இந்திய மொழிகளிலும் இப்பாஷையின் தொடர்பு ஏற்பட்டு விட்டது. மொகலாயர் ஆட்சிக்குப்பின் பாரசீகர்கள் தொடர்பு குறைந்து, சென்ற 150 வருஷங்களில் தொடர்பு அற்றே போய்விட்டது.*

*இந்தியாவின் பிரதேச விஸ்தீரணத்தில் ஐந்தில் இரண்டு பங்கு உள்ளது பாரசீகம் என்று சொல்லலாம்.* இதன் எல்லைகள் வடக்கில் ரஷ்யா, கிழக்கில் ஆப்கனிஸ்தான், பலுச்சிஸ்தான், தெற்கில் அரபிக்கடல், மேற்கில் ஈராக். விஸ்தீரணம் 6,30,000 சதுர மைல்கள். விசேஷ முக்யத்துவமுள்ள நதிகள் எதுவும் பாரசீகத்தில் கிடையாது.*

*ஜோராஸ்திரியானிஸம் என்கிற பாரசீக மதத்தின் கொள்கைக்கும் ஹிந்துக்களின் வேதங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களுக்கும் அதிக ஒற்றுமைகள் காணப்படுகின்றன.*

*பழங்கால பாரசீகத்தில் தத்துவ ஞானிகளும் கவிகளும் மலிந்திருந்தனர் என்று சரித்திரம் கூறுகிறது.*

*பாரசீக மக்களின் பூர்வோத்திரம்மிகத் தொன்மை வாய்ந்தது. இவர்கள் ஆரியர்களின் ஒரு பகுதியினரே என்று சொல்லப்படுகிறது. இவர்கள் தங்களை ஈரானியர்கள் என்று சொல்லிக் கொள்வதால் இவர்கள் நாட்டிற்கு ஈரான் என்ற பெயரும் உண்டு. ஜனத்தொகை சுமார் 1,50,00,000 பேர்.*

பாரசீகத்தின் தலைநகரம். டேஹ்ரான் (ஜனத்தொகை 5,40,000). டாப்ரிஸ் என்பது அடுத்ததான முக்கியநகரம் (ஜனத்தொகை 2,50,000). பாரசீக மக்களில் பெரும்பாலோர் விவசாயத்தையே தொழிலாக உடையவர்கள். ஜோராஸ்திரிய மதம் விவசாயத்தை உன்னதமான தொழில் எனக் குறிப்பிட்டிருக்கிறது. பாரசீகத்தின் ஜனத்தொகை முன்காலத்தில் இன்னும் அதிகமாக இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. பதின்மூன்றாவது நூற்றாண்டில் மங்கோலியர்களின் படையெடுப்பு காரணமாக ஜனத்தொகையில் மிகவும் சேதம் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து ஈரான் இன்னும் மீளவில்லை என்றுகூடச்சொல்லலாம். ஈரான் நாகரீகத்திற்கும் கலாசாரத்திற்கும் பெரும் சேவை செய்திருக்கிறது. ஈரான் என்றதும் அதன் எண்ணெய்தான் சட்டென்று நமது நினைவிற்கு வரும். ஆனால் இதைவிட கலாசாரப் பண்பில் மேம்பட்டது ஈரான்.

மலை, பாலை இவை அதிகமுள்ள பூமி. நில விஸ்தீரணத்தில் 10 சத விகிதமே சாகுபடி செய்யப்படுகிறது. சுமார் 2500 வருஷங்களுக்கு முன் பாரசீகத்தில் பொற்காலம் ஏற்பட்டது என்று கூறலாம்.

1906 வரை ஈரானை சர்வாதிகாரப் போக்குள்ள அரசர்களே ஆண்டுவந்தனர். இந்த 1906ல் தான் மூஸபருதீன்ஷா என்பவர் அரசியல் சட்டத்தை வகுக்க வழி செய்தார். முதல் மஜ்லிஸ் (பார்லிமெண்ட்) 1906 அக்டோபரில் ஏற்பட்டது. மஜ்லிஸுக்கு அபேட்சகர்கள் கட்சிகளின் சார்பில்நிறுத்தப் படுவதில்லை. தனிப்பட்டவர்களின் தகுதியைக் கவனித்தே நிறுத்தப் படுகின்றனர். ஆகவே அரசியல் கட்சிகளுக்கு அங்கு முக்கியத்துவம் கிடையாது.

இப்போதுதான் சில கட்சிகள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. இவை பாரசீகத்தின் வருங்கால நிர்வாகத்தில் எத்தகைய பங்கைப் பெறப்போகின்றன என்பது காலப்போக்கில்தான் தெரியும்.

பாரசீகத்தின் சரித்திரம் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். எஸ்ரா, எஸ்தர் இவர்களின் பழைய 'டெஸ்ட்மெண்ட்'டிலும் பாரசீகத்தைப் பற்றிய குறிப்பு காணப் படுகிறது. பாரசீகத்தை ஆண்ட பிரபல மன்னர்களான டாரியஸ், க்ஸர்க்ஸஸ் இவர்களின் ஆட்சியில் பாரசீக செல்வாக்கு உலகில் மிக உயர்ந்து இருந்தது. ஸைரஸ் என்பவன் ஏற்படுத்திய சாம்ராஜ்யம் சுமார் 200 வருஷ காலம் நிலைத்திருந்தது. மகா அலெக்ஸாந்தர் படையெடுப்பின் போதுதான் அது சீர் குலைந்தது. இதன் பின்னர் சுமார் 400 வருஷகாலம் ஸாஸ்ஸானியர்கள் ஆண்டனர். இவர்களில் பிரபலமாக விளங்கிய அரசர் நுஸ்ரூ நௌஷிர்வான். (இவர் ஆட்சிக் காலத்தின் போது தான் கி. பி. 570ல் நபிநாயகம்

அவதரித்தார்.) காலிப் ஓமார் என்ற அரபு தலைவரின் படையெடுப்பு காரணமாக இந்த ஆட்சி சீர்குலைந்தது. பின்னர் அராபியர்கள், துருக்கர்கள், மங்கோலியர்கள் பாரசீகத்தை 16 வது நூற்றாண்டுவரை ஆண்டிருக்கின்றனர். 1699ல் இஸ்மைல் ஸபாவி என்பவர் ஆட்சியைக் கைப்பற்றி தன்னை ஈரானின் ஷா என்று பிரகடனப் படுத்திக் கொண்டார். இவர் ஆட்சி 1720 வரை நீடித்தது. ஷா அபாஸ் என்பவர் 1756ல் பட்டம் ஏறினார். இந்தியாவில் அக்பர் பெற்ற புகழை இவர் பெற்றார். எலா மதங்களையும் இவர் சமமாகப் பாவித்தார். இவர் ஆட்சி 1629ல் முடிவடைந்தது. 1720ல் ஆப்கன் படையெடுப்பு ஏற்பட்டது. ஆனால் இவர்கள் ஆட்சி 1727க்கு மேல் நீடிக்கவில்லை. ஒரு பாரசீக சோல்ஜரான நாதிர் என்பவர் ஆட்சியைக் கைப்பற்றி நாதர்ஷா என்று பட்டம் ஏற்றார். துருக்கியர்களை முறியடித்து ஆப்கனிஸ்தான் மீதும் படையெடுத்தார். ஆனால் இவர் அத்துடன் நின்று விடவில்லை. இந்தியா மீதும் படையெடுத்து டில்லியைக் கைப்பற்றிச் சூறையாடினார். அப்போது இருந்த மொகலாய அரசர் இவருடன் சமாதானம் செய்துகொண்டு தன் பெண்ணை நாதிர் பிள்ளைக்கு மணம் செய்து கொடுத்ததுடன் அல்லாமல் ஷாஜஹான் காலம் முதல் உபயோகிக்கப் பட்டுவந்த புகழ் பெற்ற மயிலாசனத்தையும் கொடுத்தார்.

இந்த மயிலாசனத்தின் மதிப்பு 1 கோடி, 30 லக்ஷம் டாலர்களாகும்.

1920ல் ரிஸா ஷா பாலபி என்பவர் பட்டம் ஏறினார். இவரும் சோல்ஜராக இருந்து சேவை செய்தவர்தான். இவர் மேற்கொண்ட சில சீர்திருத்தங்கள் காரணமாக இவரின் புகழ் ஓங்க ஆரம்பித்தது. இவருடைய மூத்த புதல்வர்தான் இப்போது ஆட்சி செய்யும் மன்னர். இவருக்கு இப்போது முப்பத்தாறு வயது தான் ஆகிறது. இவர் மேல் நாட்டுக் கல்வியும் முற்போக்குக் கொள்கையையும் உடையவர். 1941ல் இவர் பட்டத்திற்கு வந்தபோது இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ரோமல், அலெக்ஸாண்டிரியாவை நோக்கிப் படையெடுத்து வந்த சமயம். பாரசீக மண்ணில் பிரிட்டிஷ் படைகளும் இருந்த சமயம் அது.

ஈரானில் ஏராளமான எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. இந்த எண்ணெய்க்கிணறுகள் மீது ருஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மெனி ஆகிய எல்லா நாடுகளுக்குமே ஒரு கண் எப்போதுமே உண்டு.

1946ல்தான் ஈரான் சுதந்திரம் பெற்றது. ஆயினும் ஈரானின் எண்ணெய்க் கிணறுகள் பிரிட்டன், அமெரிக்காவைச் சேர்ந்த முதலாளிகளிடமே இருந்து வந்தன. 1951ல் ஷாவின் பிரதமர் முஸாதிக் மக்க

ளிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். இவர் எண்ணெய்க் கிணறுகளைச் சொந்தக் காரரே ஏற்று நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார். தேசிய மயமாக்கப்பட்ட கிணறுகள் சரியாக வேலை செய்யவில்லை. ஷா அவரை நீக்கினர். அவருக்குப் பதிலாக வந்த பிரதமரும் அதிக நாள் நீடிக்கவில்லை. ஏனெனில் பொது மக்கள் மீண்டும் முசாதிக்கே பதவிக்கு வரவேண்டும் என்று முயற்சி செய்தனர். ஷா மக்கள் இஷ்டத்திற்கு இணங்கி அவரை ஏற்றார். மீண்டும் ஷாவுக்கும் முஸாதிக்குமிடையே வேற்றுமைகள் வளரத்தொடங்கின. முஸாதிக்கைப் பதவியிலிருந்து நீக்கிச்சிறைப்படுத்தினர். அன்றே யாருக்கும் தெரியாமல் ஷாவும் அவர் மனைவியும்இதாலி தேசத்துக்குப் பறந்து சென்றுவிட்டனர். இப்போதுதான் ஈரான் நாட்டு மக்களுக்குத் தங்கள் நலனை உண்மையில் கோருபவர் யார் என்பது நன்றாகப் புரியலாயிற்று. பிரதமரைவிட மன்னரே தங்கள் நலன்களில் அக்கறை கொண்டவர் என்பது தெளிவாயிற்று. ஆகவே தங்கள் மன்னரைத் திரும்பி வந்து ராஜ்யப் பொறுப்பு ஏற்கும்படி வேண்டினர். தேசத்தை விட்டு வெளியேறிய நான்காவது நாளே தமது நாட்டுக்குத் திரும்பிவந்து அரசபதவி ஏற்றார் ஷா. அன்றிலிருந்து ஷாவின் செல்வாக்குப் பெருகிவருகிறது.

இவ்வளவுக்கும் காரணம் ஷா ஈரான் நாட்டு விவசாயிகளின்பேரன்பைப் பெற்றுவிட்டதுதான். அவர் தன் சொந்த நிலங்களில் ஏராளமானவற்றை விவசாயிகளுக்குப் பூதானம் வழங்கியிருக்கிறார். எண்ணெய்க் கிணறுகள் விஷயத்தில் மீண்டும் பிரிட்டன், அமெரிக்கா முதலானவைகளுடன் ஈரான் தேசநலனுக்குப் பயன்படும் வகையில் ஒப்பந்தம் செய்துகொண்டு அத்தொழில் களையேநடத்த ஏற்பாடு செய்திருக்கிறார். ஷாவின் முதல் மனைவி பாவ்ஸியாமாஜி எகிப்து மன்னர் பரூக்கின் சகோதரி. அவரை விவாகரத்து செய்துவிட்டு சாதாரண பிரஜையை மணந்து அவரை ராணியாக்கினர். இதிலிருந்து அவர் செல்வாக்கு மேலும் வளர்ந்தது.

ஈரானில் எண்பது சத விகிதத்திற்குமேல் படிப்பு வாசனையற்றவர்கள். எனவே, ஷா தன் மனைவியுடன் இரண்டு மணி நேரம் பள்ளிகளுக்குச் சென்று கல்வி புகட்டிவருகிறார்.

—“ திங்கள்”

# சமூக பாடப் பயிற்சி நூல்

## (Social Studies Record Books.)

**புதிய பாடத் திட்டப்படி திருத்தி அமைக்கப்பட்டது.**

*மாவட்டங்கள்*

| | |
|---|---|
| சென்னை | 75 ந.பை |
| செங்கற்பட்டு | ,, |
| வட ஆர்க்காடு | ,, |
| தென் ஆர்க்காடு | ,, |
| சேலம் | ,, |
| கோயமுத்தூர் | ,, |
| நீலகிரி | ,, |
| திருச்சிராப்பள்ளி | ,, |
| தஞ்சாவூர் | ,, |
| மதுரை | ,, |
| இராமநாதபுரம் | ,, |
| திருநெல்வேலி | ,, |
| கன்னியாகுமரி | ,, |
| ஐந்தாம் வகுப்பு | 87 ந.பை |
| ஆறும் வகுப்பு | 94 ந.பை |

**பழைய பாடத் திட்டப்படி**

| | |
|---|---|
| ஏழாம் வகுப்பு | 62 ந.பை |
| எட்டாம் வகுப்பு | 62 ந.பை |

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

*'ஆரம்பக்கல்வி' ஆபீஸ்*

**94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.**

# சமூகப் பாடப்பயிற்சி நூல் திறவு கோல்

## Key to Social Studies

சமூகப் பாடப்பயிற்சி நூல்கள், 4, 5, 6 வகுப்புகள் வரையில் புதியபாடத் திட்டப்படியும் 7, 8 வகுப்புகளுக்குப் பழைய பாடத்திட்டப்படியும் தயாரிக்கப்பட்டுள்ளன. புதிய பாடத்திட்டப்படி 4, 5, 6 வகுப்புகளுக்கு வேண்டிய முக்கிய கேள்விகளும், குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. சில ஆசிரியர்களுக்குக் கேள்விகளுக்கான தக்க விடைகளும், குறிப்புகளுக்கான விளக்கங்களும் தயாரித்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்க முக்கியமாக கிராமப் பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. ஆதலால் ஆசிரியர்களுக்கு உதவியாய் இருக்க நாம் பிரசுரித்துள்ள சமூகப் பாடப் பயிற்சி 4, 5, 6 வகுப்புகளுக்கான பயிற்சி புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதில்களும், குறிப்புக்களுக்கான விளக்கங்களும் வகுப்பு வாரியாகத் தனியே அச்சடித்திருக்கிறோம். நமது பாடப் பயிற்சி புத்தகங்கள் வைத்திருக்கும் பாடசாலை ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் மூலமாய்க் கடிதம் எழுதினால், மேற்படி சமூக பாடப் பயிற்சி நூல் திறவுகோல் வகுப்பு வாரியாக வகுப்பு ஒன்றுக்கு ஒரு பிரதி வீதம் இனமாக அனுப்பி வைக்கப்படும்.

**மானேஜர்,**

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,**

**ஆரம்பக்கல்வி ஆபீஸ், சென்னை—1.**

# பேசும் நூல்கள்

பிரிட்டனிலுள்ள தேசிய விழி யிழந்தோர் நலக்கழகம் சென்ற 90 ஆண்டுகளாகச் சிறந்த முறை யில் பணியாற்றி வருகிறது. விழி யற்றோர்க்குக்கல்வி அறிவுபுகட்ட பல சாதனங்களைக் கண்டுபிடித்து வழங்கியிருக்கிறது. பார்வை யிழந்த போர் வீரர்களுக்குப் பணியாற்றும் ஸெயின்ட் டன்ஸ் டன் சங்கத்துடன் சேர்ந்து பல் வேறு நூல்களை இசைத் தட்டு களில் பதிப்பித்து விழியிழந் தோருக்கு வழங்கியிருக்கிறது. ஆனால் இந்த வசதியை அனை வரும் பயன்படுத்த முடியாது. செலவும் அதிகம். சிக்கலும் உண்டு. ஆகவே எளிய முறை யில் நூல்களை ஒலிப்பதிவு செய் வது பற்றிப் பார்வையிழந்தோர் நலப்பணியிலீடுபட்டுள்ள ஊழி யர்கள் சிந்தித்தார்கள். இசைத் தட்டுக்களுக்குப் பதிலாக ஒலி நாடாக்களை உபயோகிக்க முடிவு செய்தார்கள்.

பிரிட்டனில் விழியிழந்தோ ருக்குப் பயன்படக்கூடிய நூலகம் ஒன்று உண்டு. அங்கு ஏடுக ளுள்ள நூல்கள் இல்லை. எழுத் துக்களை ஒலியாக்கி இசைத் தட்டில் பதிவு செய்த 700 நூல் கள் இருக்கின்றன. இந்த நூலகத்தில் ஏறக்குறைய 6,500 பேர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சிறந்த முறையில் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இசைத் தட்டுக்களில் நூல் களைப் பதிவு செய்வதில் சில குறைபாடுகள் உண்டு. பல நூறு பக்கங்களைக் கொண்ட நூல்களை இசைத்தட்டில் படி எடுக்க முடியவில்லை. அதிக பட்சமாக 15 இசைத் தட்டுகள் தான் ஒரு நூலுக்கு உபயோகிக் கப்படுகிறது. இசைத்தட்டில் பதிவு செய்வதில் செலவும் அதி கம். மேலும், அடிக்கடி கையா ளுவதால் இசைத்தட்டுகளுக்குச் சேதமேற்படுகிறது; ஓசை மங்கி விடுவதுண்டு. அவ்வப்போது அவற்றை மாற்றிப் புதிய தட்டுக் களைத் தயாரிக்க வேண்டியிருக் கிறது. இதனால்தான் மாற்று வசதி ஒன்றைப் பற்றி விஞ்ஞானி கள் சிந்தித்தார்கள். ஒலிநாடா முறை பல வகைகளில் சாதக மானது. ஒலி நாடாவில் நீண்ட நூல்களைப் படி எடுப்பது எளிது. பதிவான ஒலி தெளிவாக இருக் கிறது. ஒலிநாடா இசை குறை யாமல் நெடுநாள் உழைக்கிறது. புதிதாக வந்துள்ள ஓர் சிறந்த நூலை இசைத்தட்டில் ஒலிப்பதிவு செய்து அந்தகர்களுக்கு வழங்க சில மாதகாலம் ஆகிறது. அந்தச் சிறந்த நூலைப்பற்றித் தெரிந்து கொண்டாலும், அதை முழுதும் 'படித்து' மகிழும் வாய்ப்பு, அந் தகர்களுக்கு உடனே கிடைப்ப

இல்லை. ஒலிநாடா முறையில் பதிவு செய்யத் தொடங்கி பிறகு, ஒரு நூல் வெளி வந்து சில நாட்களுக்குள் அதை ஒலி யாக்கி வழங்க முடிகிறது.

நூலக உறுப்பினர்களிடமுள்ள பழைய எந்திரங்களை அகற்றி விட்டு, ஒலிநாடாக்களை இயக்கக் கூடிய எந்திரங்களை அமைப்பதில் நூலகச் சிப்பந்திகள், இப்போது கவனம் செலுத்தி வருகிறார்கள்.

பல பக்கங்களுள்ள நூல்களை ஒரே நாடாவில் பதிவு செய்வதி லும் ராயல் சங்கத்தின் ஆராய்ச் சிப் பிரிவைச் சேர்ந்த விஞ்ஞானி கள் வெற்றி பெற்று விட்டார்கள். சாதாரண உபயோகத்திலிருக் கும் ஒலிநாடாவில் இரண்டு அல்லது நான்கு கோடுகளில் ஒலிப்பதிவு செய்வது வழக்கம். இந்த நாடா அதிகபட்சமாக மூன்று மணி நேரம் இயங்கக் கூடியது. ராயல் சங்க ஆராய்ச் சிப்பிரிவினர் கண்டுபிடித்துள்ள ஒலி நாடா அரை அங்குலம் அகலமுள்ளது. அதில் 18 கோடுகளில் ஒலிப்பதிவு செய்ய முடியும். ஒரு நாடா சுமார் 20 மணி நேரம் ஒலிக்கக்கூடியது, இந்த முறையில் இருவித லாபம் உண்டு. இசைத் தட்டை அடிக் கடி மாற்றுவது போல ஒலி நாடாவை மாற்றும் அவசியம் இல்லை. ஒலி நாடா கையடக்க மாக இருப்பதால் ஒரு பெட்டிக் குள் பல நாடாக்களைச் சேமித்து வைக்க முடியும். சாதாரணமாக 20 அல்லது 25 இசைத்தட்டுக் களில் பதியும் ஒலியை ஒரு நாடாவில் பதிந்துவிட முடியும். இசைத்தட்டுக்குச் சேதமேற்படு வதுபோல ஒலி நாடாவுக்குச் சேதமேற்படாது.

விழியிழந்தவர் ஒருவர் 'படிக்க' விரும்புகிறார் அவர் ஒலிபெருக்கியைக் காதில் பொருத்திக்கொண்டு ஸ்விட்சைப் போடுகிறார். வேண்டும் அளவில் ஓசையைச் சரிக்கட்டிக் கொள் கிறார். நாடாவின் முதல் கோட்டி லுள்ள ஒலியைக் கேட்கிறார். முதல் கோடு முடிந்ததும் எச்ச ரிக்கை ஒலி கேட்கிறது. எந்தி ரத்தை நிறுத்திவிட்டு, இரண்டா வது கோடு இயங்கும் முறையில் நாடாச் சுருளை அமைக்கிறார். மீண்டும் ஒலி கேட்கிறது.

நூலகத்தைப் பயன்படுத்தும் உறுப்பினர்களுக்கு, ஒலி இசைப் பானை மிகவும் குறைந்ததோர் கட்டணத்திற்கு வாடகைக்குத் தரப்படுகிறது. 'ஒலி நூல்கள்' இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒலி நாடாக்களைத் திருப்பி நூல கத்திற்கு அனுப்புவதற்கு சலுகைகளை வழங்கியிருப்பதற் காக அஞ்சல்துறைக்கு நன்றிகூற வேண்டும்.

ஒலி நூல்களைத் தயாரிப்பதி லும் தனிக்கவனம் செலுத்தப்படு கிறது. கணீரென்றும் தெளி வாகவும் உச்சரிக்கும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து - சாதாரணமாக இவர் பி. பி. ஸியைச் சேர்ந்தவ ராக இருப்பார் அல்லது நடிக ராக இருப்பார்-நூலைப் படிக்கச் சொல்லி ஒலிப்பதிவு செய்கிறார் கள்.

பிறகு, அதிவேகத்தில் இயங்கும் எந்திரத்திலிட்டுப் படிகளை எடுக்கிறார்கள். ஒரு நூலுக்கு நல்ல வரவேற்பு இருந்தால் மேலும் பல படிகளைத் தயாரிக்கிறார்கள்.

படி எடுக்கும்போது இசைத் தட்டுகளில் கீறல் விழுந்து சேதமேற்படும். ஆனால் ஒலி நாடாவில் சேதமேற்பட வழியில்லை. ஒரு நாடாவை அனைவரும் 'படித்து' விட்டால், இனிமேல் அந்த நூலுக்குத் தேவை இராது என்று தெரிந்தால் நாடாவிலுள்ள ஒலியைத் 'துடைத்து விட்டு' வேறு ஒலியைப் பதிவு செய்யமுடியும். இதனால் ஒரே நாடாவைப் பல தடவை உபயோகிக்க முடிகிறது.

நவீனம், வரலாறு, வேதாந்தம், விஞ்ஞானம் எனப் பல்வகை நூல்கள் ஒலியாக்கப்படுகின்றன. ஒலி நாடா முறையில் மேலும் பல்வகை நூல்களைப் பதிவு செய்து வழங்க முடியும்.

---

## உங்களுக்குத் தெரியுமா?

நோய் பரவ ஈக்கள்தான் முக்கிய காரணம் என்பதை விளக்குக.

ஒரு ஈயின் உடலின்மேல் அறுபது இலட்சம் மிகநுண்ணிய கிருமிகள் தொத்திக்கொண்டிருக்கின்றனவாம்! அதுமட்டுமல்லாமல் அதன் குடலுக்குள்ளே 2 கோடியே 80 இலட்சம் நுண் கிருமிகள் இருக்கின்றனவாம். சிறியஉடலைக்கொண்ட ஈக்கு பொருத்தமில்லாத வகையில் மிகப் பெரிய கண்கள் இருக்கின்றன. அவைகளுக்கு அருகே பல சிறு சிறு கண்களும் இருக்கின்றன. இதனால் நாம் உண்ணும் பொருள்களை உடனே அது காணமுடிகிறது. அவற்றின் மேல் அது மொய்க்கத் தொடங்குகின்றது. இதனால் ஈக்களின் உடலின் மேலுள்ள நுண்ணிய கிருமிகள் உணவில் படிகின்றன. இவையே நோய் பரவக்காரணங்கள்.

கடிகாரங்களில் நிமிடங்கள் 60 என்றும் விநாடிகள் 60 என்றும் கணக்கிடப்பட்டிருக்கக் காரணமென்ன?

5000 ஆண்டுகளுக்கு முன்பு அறுபது அறுபதாகப் பிரித்துக் கணக்கிடும் வழக்கம் பாபிலோனியர்களுக்கு முற்பட்டவர்களாகக் கூறப்படும் சுமேரியர்கள் காலத்திலிருந்துதான் இந்த முறை வழக்குக்கு வந்ததாம். இதைப்பின்பற்றியே நிமிடங்களும், விநாடிகளும் அறுபதுக் கணக்கில் கணக்கிடப்பட்டன.

— போதன விஷயப் பூங்கொத்து

# வாழ்க்கையைப் பற்றிய அறிஞர்கள் கருத்துரை

தொடுத்தவர் : எஸ். குழந்தைநாதன்

சோர்வு கொள்வதற்கேதுவான நீண்டபயிற்சி-இதுதான் வாழ்க்கை.
—சாமுவேல் பட்லர்.

நாம் எதற்காக வாழ்கிறோம்? பிறரது வீண் பொழுது போக்குக்காக-அத்துடன் அவர்களையும் நம்பொழுது போக்குக்காக ஆக்க.
—ஜேன் ஆஸ்டின்.

அழுகையுடன் தொடங்கி அலறலுடன் முடிவுறும் இந்த வாழ்க்கையிடம் ஏன் நமக்கு இவ்வளவு பற்றுதல்.
—மேரிவார்விக் பெருமாட்டி.

வாழ்க்கை என்பது அழுகை, சிரிப்பு, முணுமுணுப்பு ஆகியன கலந்த கூட்டு-ஆனால் அதில் பெரும்பகுதி முணு முணுப்புத்தான்.
—யாரோ.

வாழ்க்கை ஒரு தீராத நோய். —ஆப்ரகாம் கௌலி.

ஆண்கள் வாழ்வின் இயல்பை மிக மிக முன்னதாகவே உணர்ந்து விடுகிறார்கள். பெண்களோ மிகப் பிந்தித்தான் உணர முடிகிறது.
—ஆஸ்கார் ஒயில்டு.

வாழ்க்கை யென்பது ஒரு வழியமைப்பு. தானே துவக்கமாகவும் வழியாகவும், இறுதி நிலையாகவும் உள்ள எல்லையற்ற பரம்பொருள்தான் அதன் முடிவு.
—பெய்லி.

எண்ணந்தான் வாழ்வு —கோலரிட்ஜ்.

வாழ்வு என்பது ஒரு பெரும் சோதனை... ஆய்வு... தொடர்ந்த சோதனை வாழ்வைத் தூய்மை செய்கிறது.
—எமர்ஸன்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையும் அவரவரது நாட்குறிப்பேடு (டைரி) போல. நாட்குறிப்பேட்டில் நாம் செய்யத் திட்டமிட்டு எழுதி வைப்பதொன்று, நடப்பதோ மற்றொன்று. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதுதான் வாழ்க்கைத் தத்துவம் புலப்படுகிறது.
—ஜே. எம். பாரி.

சாதாரண விஷயங்கள் அடங்கிய பெரிய மூட்டை-இதுதான் வாழ்க்கை.
—O. W. ஹோல்ம்ஸ்.

வாழ்க்கை யென்பது ஒரு ஆசிரியனது நூல் நிலையம்போல. அதில் அவனால் எழுதப்பட்ட நூல்கள் மிகுதியாகவும் இருக்கும்.
—ஹென்ரி எமர்ஸன் பாஸ்டிக்.

வாழ்க்கை வெறும் நன்மையுமில்லை, தீமையுமில்லை. நன்மையும் தீமையும் இணைந்துள்ள ஓரிடம் அதுதான் வாழ்க்கை.

—செனீகா.

வாழ் நாள் சிறிது; வளர்கலை பெரிது.

—ஹிப்போகிராட்டஸ்.

இருபதாண்டுகள் சிறுவன். இருபதாண்டுகள் இளைஞன். இருபதாண்டுகள் மனிதன். இருபதாண்டுகள் முதியவன். வாழ்வின் நூற்கூறுகள் இவைதான்.

—பித்தகோரஸ்.

வாழு, வாழவிடு.

—ஷில்லர்.

வாழ்க்கை ஒரு பெரும்போர்.

—ராபர்ட் பிரௌனிங்.

வாழ்க்கை ஒரு அவல நாடகம். நாம் சிறிதுநேரம் நாடகத்தைக் கண்ட பின்னர், அதில் நடிக்கவும் சென்று விடுகிறோம்.

—ஸ்விப்ட்.

திரும்பிப்பெறும் நாளைக் குறிப்பிடாமல் இயற்கை தந்த கடன் தான் வாழ்க்கை.

—சிசரோ.

ஆய்ந்துணர்தற்குக் கடினமான அழகுக்கலைதான் வாழ்க்கைக் கலை.

—ஜான்மேஸி.

நாம் வாழ்வதற்காக முயன்றுகொண்டே இருக்கிறோமே தவிர வாழ்வதில்லை.

—மானிலியஸ்.

வாழ்க்கைக் கணக்கின் அன்றாட இருப்பை அன்றே கட்டிவிட வேண்டும்.

—செனீகா.

வாழும் பொழுதே வாழ்வோம்.

—யாரோ.

ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கை ஒரு சிறந்த கவிதை.

—கார்லைல்.

இளமை முழுதும் ஒரே இழுக்கு. நடு முதிர்ச்சிக் காலம் முழுவதும் ஒரே போராட்டம். முதுமை முழுவதும் ஒரே தொல்லை— இதுதான் வாழ்க்கை.

—பீல்டிங்.

—வாரச் செய்தி

# ★ செய்திச் சுருள் ★

## பாடப் புத்தகங்களை அரசாங்கம் வெளியிட்டால் தரம் குறையும்

### டாக்டர். இலட்சுமணசாமி முதலியார் கருத்து

புத்தக வெளியீட்டாளர்களுக்கு நிதி உதவி தரும்படி யோசனை

பாடப் புத்தகங்களை அரசாங்கமே வெளியிட்டால் தரம் குறைந்துவிடும் என்று சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் அண்மையில் சென்னையில் கருத்து தெரிவித்தார்.

தென்னிந்திய புத்தகத் தொழில் கவுன்சில் நடத்திய முதல் தேசிய புத்தக விழாவின் இறுதி நாள் வைபவத்தில் அவர் தலைமை வகித்துப் பேசினார்.

உற்பத்தி செலவை ஈடு செய்யக்கூடிய வகையில் அரசாங்கம் உதவிகளைச் செய்ய முன்வந்தால் தரம் உயரவும், மலிவான விலையில் மாணவர்களுக்குப் புத்தகங்கள் கிடைக்கவும் வழி பிறக்கும் என்றார்.

பல்கலைக் கழக நூற்றாண்டு நினைவு மண்டபத்தில் நடந்த இந்த விழாவில் அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளில் வெளியான மலிவான பாடப் புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் உயர் படிப்புக்குச் செல்லும் மாணவர்கள் எல்லோரும் ஒரு சுதந்திர சூழ்நிலையில் பயில வேண்டும். எந்தத் திறமையான சர்க்காராலும் சரி, புத்தகத் தொழிலை எடுத்து நடத்த முற்பட்டால், அந்தச் சூழ்நிலைக்கு வர்த்தகர்கள் ஒருவரை ஒருவர் மிஞ்ச மேற்கொள்ளும் முயற்சிக்குக் கேடு விளைவிப்பதோடு, தரம் தாழ்ந்துவிடுவதற்கும், வழியமைப்பதாகி விடும் என்று டாக்டர் முதலியார் எச்சரித்தார்.

நன்றி தெரிவித்துப் பேசிய கவுன்சிலின் அமைப்பாளர் திரு. வி. சதானந்தா பாடபுத்தகக் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் அசமந்தப் போக்கினால் மாணவர்கள் புத்தகங்கள் கிடைக்காது தத்தளித்தனர் என்று கண்டித்தார். எனவே அதை நீக்கிவிட்டு வர்த்தகர்களிடையே பொறுப்பை விட்டுவிட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## தமிழர்களின் கலைத்திறன்

மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சர் பாராட்டு

"தமிழர்கள் சிறந்த கலைஞர்கள்—கடின உழைப்பாளிகள். இதன் காரணமாக அவர்கள்

நாடெங்கிலும் பரவியிருக்கின்றனர். செல்வாக்கும் பெற்றிருக்கின்றனர்'' என மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. கே. அனுமந்தைய்யா இராபர்ட்சன் பேட்டையில் பேசுகையில் தெரிவித்தார்.

மைசூர் சட்டசபைக் கட்டிட நிர்மாணப் புகழ் தமிழகச் சிற்பிகளையே சாருமென்றார். கர்னாடகத்தில் இயற்கை வளம் கொழித்தாலும் அந்த வளத்தை ஆர்வமின்மை காரணமாக மக்கள் சரியாகப் பயன்படுத்த வில்லை என்றார்.

## கல்வித் துறையில் அபிவிருத்தி

### வெளிநாட்டு முறைகளைப் பரிசீலிக்கத் தமிழ்நாடு அரசினர் எண்ணம்

கல்வித்துறையில் புது அபிவிருத்திகள் செய்ய வெளிநாடுகளில் கல்வித் துறைகளில் கையாளப்படும் முறைகளைப் பரிசீலனை செய்யத் தமிழ்நாடு அரசாங்கம் உத்தேசித்துள்ளதென மாநிலக் கல்வி அமைச்சர் திரு.சி. சுப்பிரமணியம் அண்மையில் தெரிவித்தார்.

இந்நாட்டுக் கல்வி முறைக்கு ஏற்றதாக உள்ள வெளி நாட்டு அம்சங்களைத் தாராளமாக எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

## உயர்நிலைப்பள்ளிகளில் 11-வது வகுப்பு துவக்கும் முடிவு ஒத்திவைப்பு

உயர் நிலைப் பள்ளிகளில் 11-வது வகுப்பை ஆரம்பிக்கும் திட்டம் தற்போதைக்கு ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

அதை ஆரம்பிப்பதற்கான வசதிகள் இல்லாத காரணத்தால் சர்க்கார் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

1962–63-ம் ஆண்டு முதல் உயர் நிலைப்பள்ளிகளில் பல்கலைக் கழகப்புகுமுக வகுப்பை 11-வது வகுப்பாக நடத்துவதென்று ஒரு முடிவு எடுக்கப்பட்டது தெரிந்ததே.

இந்த வகுப்புக்களை உயர் நிலைப் பள்ளிகளில் ஆரம்பிப்பதாயிருந்தால் ஒன்று, கட்டிட வசதி, இரண்டு ஆசிரியர்கள் வசதி மிக முக்கியம். இவைகளன்றி விஞ்ஞான படிப்புகளுக்குரிய வசதிகளும் இருக்க வேண்டும்.

இவைகளை எல்லாம் 1962-63-ம் கல்வியாண்டிற்குள் ஏற்படுத்திவிட முடியாது என்று கல்வி நிலையங்கள், இருக்கிற கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள்.

இதன் காரணமாக அதை ஒத்திவைப்பதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

## போகாத இடந்தனிலே போகவேண்டாம் !

"போகாத இடம் தனிலே போக வேண்டாம்'' என்ற முது

மொழி மனிதனுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்குக்கூடவெகுவாகப் பொருந்துகிறது. இதற்கு ஒரு சீரிய உதாரணம் தலைச்சேரியில் நடந்தது.

ஒரு சிறுத்தை காட்டில் படுத்து உறங்குவதை விட்டுக் கிராமத்தில் புகுந்து மனிதன் உறங்கும் கட்டிலில் படுத்து ஜம்மென்று உறங்கிக் கொண்டிருந்தது. இந்த நிலையே அதற்கு எமனாக வந்து விட்டது.

முதலில் இச் சிறுத்தை தனி பரம்பா என்ற கிராமத்திற்குள் வந்து அதிகாலையில் ஒரு வீட்டில் புகுந்து விட்டது. அப்போது அங்கே வந்த பெண்ணையும் தாக்கி விட்டது. அவள் சத்தமிட்டபடி வெளியே ஓடித் தப்பினாள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் இவளின் உதவிக்கு வந்து சத்தமிடவே சிறுத்தை ஓடிவிட்டது.

ஆனால் சிறிது நேரம் கழித்ததும் சிறுத்தை இதே வீட்டிற்கு மறுபடியும் விஜயம் செய்தது. அங்கு உள்ள ஒரு அறைக்குள் நுழைந்து கட்டிலில் காலைப் பரப்பிக்கொண்டு நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்துவிட்டது. இந்த வீட்டின் சொந்தக்காரர் காயம் பட்ட தன் மனைவியைக் கண்ணனூர் ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டுத் திரும்பி வந்தார். கதவைத் திறந்ததும் சிறுத்தை படுத்து உறங்குவதைக் கண்டார். உடனே கதவை இறுக மூடிவிட்டு, அருகிலிருந்த வேட்டைக்காரர்களிடம் சென்று கூறினார்.

அவர்கள் வந்து சன்னல் மூலம் அதைச் சுட்டுக் கொன்றனர்.

## பொது நிகழ்ச்சிகளில் கடவுள் வாழ்த்து!

### அமைச்சர் கருத்து!

பொது நிகழ்ச்சிகளில் கடவுள் வாழ்த்து பாடும்போது எல்லோருக்கும் பொதுவான முறையில், பொருத்தமானபாடல்களைப் பாடுவது அவசியம். எந்தெந்தப் பாடல்களைப் பாடலாம் என்று வகுத்துக் கொள்வது நல்லது என்று நிதி மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் 20-11-61 மாலை செயலாண்மைத் துறை கூட்டுறவுப் பண்டகசாலை துவக்க விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

திருக்குறள் முதலதிகாரத்தைக் கொண்டு "அகர முதல எழுத்தெல்லாம்" என்று தொடங்கும் பாடல் பாடப்படுகிறது. அதைத் தவிர தாயுமான சுவாமிகளது பாடலும், இது போன்ற சர்வ சமயத்தினருக்கும், இயற்கை வழிபாட்டினருக்கும்கூட ஒத்த கருத்துடைய பாடல்களைப் பாடலாம் என்றும் திரு. சுப்பிரமணியம் கருத்துத் தெரிவித்தார்.

## தமிழ்நாடு அரசினர் மருத்துவத்துறை நெறியாளர்

### முதன் முறையாக ஒரு பெண் நியமனம்

தமிழ்நாடு அரசாங்க வைத்தியத்துறை நெறியாளராக குமாரி

ஏ. பி. மரைக்கார் என்ற முஸ்லிம் டாக்டர் நியமிக்கப்படுகிறார். ஒரு பெண்மணி இப்பதவிக்கு நியமிக்கப்படுவது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத் தக்கது.

பிரசவ வைத்தியத்தில் நிபுணரான இவர், தற்சமயம் எழும்பூர் ஆஸ்பத்திரியில் சூப்பரின்டெண்டாக வேலை பார்த்து வருகிறார்.

## குதிரையிலிருந்து விழுந்த திருமதி கென்னடியின் படம்

### ரூ. 17500 பெற்றுத் தந்தது

அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் மனைவி குதிரையிலிருந்து விழுந்ததைப் படமெடுத்தவருக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அந்தப் படத்தை அமெரிக்க பத்திரிகைகள் எனக்கு உனக்கு என்று விலை கூறிக் கேட்டதில் படம் 3500 டாலர்களுக்கு (ரூ. 17,500க்கு) விற்பனையாயிற்று.

"லைப்" என்ற பிரபல அமெரிக்க மாதப் பத்திரிகை அந்தப் படத்திற்கு விலை கொடுத்தது. படம் பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட மார்ஷல் ஹாக்கின்ஸ் என்பவருக்குத் தற்செயலாக இந்தப் படத்தைப் பிடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

வர்ஜீனியாவில் திருமதி கென்னடி தமது வேட்டை நாய்களுடன் குதிரையில் சவாரி செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு வேலியைத் தாண்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. குதிரை தாண்ட மறுத்து குறும்பு செய்தது. இந்த சந்தர்ப்பத்தில் படமெடுப்பவர் ஹாக்கின்ஸ் அந்த வேலிப் பக்கத்தில் தற்செயலாக நின்று கொண்டிருந்தார்.

மூர்க்கத்துடன் குறும்பு செய்த குதிரையிலிருந்து திருமதி கென்னடி தூக்கி எறியப்பட்டார். காயம் எதுவும் இல்லாமல் அவர் வேலியின் மறு பக்கத்தில் வந்து விழுந்ததை ஹாக்கின்ஸ் படமெடுத்துக் கொண்டார்.

இந்தப் படத்தைப் பிரசுரித்துக் கொள்ள வெள்ளை மாளிகை அனுமதி அளித்து விட்டதாகவும் தெரிகிறது.

## விஞ்ஞானம், மனித இயல் பாடங்களுக்கு அதிக நேரம்

### ஒதுக்கத் தலைமையாசிரியர்கள் கோரிக்கை

செங்கற்பட்டு ஜில்லா தலைமை ஆசிரியர்கள் சங்கத்தின் கூட்டம் நவ. 11-ந் தேதியன்று ஜில்லா கலெக்டர் திரு. கே. எஸ். சிவசுப்ரமணியம் தலைமையில் பூந்தமல்லி போர்டு ஹைஸ்கூலில் நடைபெற்றது. குடிமைப் பயிற்சி, கைத்தொழில் முதலிய பீரியடுகளை எடுத்துவிட்டு, விஞ்ஞான மனித இயல் பாட வகுப்புகளுக்காக அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்றும், கைத்தொழில், குடிமைப் பயிற்சிப் போதனைக்காக, பள்ளி நேரங்களைத் தவிர, இதர நேரங்களில்

வகை செய்யலாம் எனவும், அக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரஷ்யக் கல்வி முறையைப்பற்றி அக்கூட்டத்தில் கல்வி இலாகா டைரக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு பேசினர்.

சங்கத் தலைவர் திரு வஜ்ரவேலு முதலியார் கல்வி இலாகா டைரக்டரை வரவேற்றுப் பேசினர்.

## குடிப்பழக்கத்தை நீக்க முட்டைக்கோசு தைலம்

---

### அமெரிக்க டாக்டர் கண்டுபிடிப்பு

முட்டைக்கோசு சாற்றிலுள்ள சாதாரண அமோனியச் சத்துள்ள அமிலம் மதுக் குடிப் பழக்கத்தை நீக்கியும் தணித்தும் விடுவதாக அமெரிகக டாக்டர் கண்டு பிடித்திருக்கிறர். அமித மதுக் குடியால் இரைப்பையில் ஏற்பட்ட ரணத்தையும் இந்த முட்டைக் கோசுத் தைலம் ஆற்றி விடுகிறதாம். பல நோயாளி களுக்கு இம் மருந்தைக் கொடுத்துப்பார்த்து நல்ல பலனளித்துள்ளதாகக் கூறுகிறர்.

டெக்சாஸ் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பேராசிரியர் டாக்டர் வில்லியம் ஷிவி, கண்டு பிடித்திருக்கின்ற இந்த முட்டைக் கோசு தைலத்திற்கு 'குளுடாமின்' என்று பெயர். இதனை இவர் 83 நோயாளிகளுக்கு அளித்துச் சோதனை செய்து பார்த்தார்.

இந்த சிகிச்சைக்குட்பட்டவர் களில் 45 சத விகிதத்தினர் குடியை அடியோடு விட்டு விட்டனர். மற்றவர்கள் எப்போதாவது குடிக்கும் மிதக் குடியராகி விட்டனர். காலையில் எழுந்தவுடன் குடித்தாக வேண்டும் என்ற கட்டாய வழக்கம் இவர்களை விட்டு நீங்கி விட்டதாக டாக்டர் வில்லியம் ஷிவி கூறுகிறர். மற்றும் 30 சத விகிதத்தினரின் கண்மூடி மதுக்குடிப் பழக்கமும் குறைந்து விட்டதாம்.

---

## உங்களுக்குத் தெரியுமா ?

### எலிகளினல் பாழாகும் பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

ஒரு ஜோடி எலித் தம்பதியின்மூலம் பிறக்கும் குஞ்சுகள், மூன்று வருடங்களில் சுமார் மூன்று கோடிக்குமேல் பெருகிவிடுமாம். ஒவ்வொரு எலியும் ஒரு ஆண்டில் பாழாக்கும் பொருள் களின் மதிப்பு சுமார் ஆறு ரூபாய் இருக்குமாம்! அப்படியானல் ஒவ்வொரு ஆண்டும் உலகில் எலிகள் கபளீகரம் செய்வதால் ஏற்படக் கூடிய பொருள் விரயத்தைக் கணக்குப் போட்டுப் பாருங்கள். பாழாகும் பொருள்களின் மதிப்பு தெரியும்.

— போதன விஷயப் பூங்கொத்து.

# நீரின் ஆற்றல்

[பெ. நா. அப்புசாமி]

முத்துப்பிள்ளை :-நண்பர் கண்ணப்பரை உங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்று நினைத்தேன். முன் ஒரு தடவை அவர் இங்கே வந்து பேசியிருக்கிறார். ஆனால் நம்முடைய நண்பர்கள் சிலருக்கு அவர் இன்னாரென்று தெரியவில்லை என்பது எனக்குப் பின்னால் தெரியவந்தது.. அதனால் இப்போதாவது அவரை நான் அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

கண்ணப்பர் நமது நாட்டிலே விஞ்ஞானத்துறையிலே சில சிறந்த ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறார். ஆனால் அவர் வெளியே சென்று மேடைமேல் ஏறியோ அல்லது பத்திரிகையில் எழுதியோ தம்முடைய செயல்களைப் பகட்டாக வெளிப்படுத்துவதில்லை. குடத்திலிட்ட விளக்குப் போல அடக்கமாக வேலை செய்து வருகிறார்.

தமது அறிவை இன்னும் வளர்க்கும் பொருட்டு, விஞ்ஞான முன்னணியில் நிற்கும் பல மேலைநாடுகளுக்குச் சென்று அங்குள்ள அறிஞர்களோடு பழகி, அங்கு நிகழ்த்தி வரும் விஞ்ஞான ஆராய்ச்சிகளையும், அந்த அந்த நாட்டுப் பல்கலைக் கழகங்களும், ஆராய்ச்சி நிலையங்களும், செல்வம் படைத்த சீமான்களும் விஞ்ஞான முயற்சியை எவ்வாறெல்லாம் ஆதரித்து வருகிறார்கள் என்பதையும் தெரிந்து வந்திருக்கிறார்.

அவர் பிறநாட்டில் நிகழும் செயல்களைச் சில சமயம் மட்டுக்கு மிஞ்சிப் புகழ்வதுபோல் தோன்றும். இதற்குக் காரணம் அவருக்குக் குறை சொல்லும் மனப்பான்மை இல்லாததுதான். புகழும் மனப்பான்மை அவருக்கு இயல்பாகிவிட்டது. ஆகையால் மற்ற நாடுகளைப் போல நம் நாடு முன்னேறவில்லையென்று நம்மைக் குறைத்துக் கூறாமல், பிற நாடுகளை மனங்குளிரப் புகழ்ந்து அந்நாட்டினரைப்போல் நாமும் முற்படுவோமாக என்று ஊக்கம் அளிப்பதே அவரது இயல்பு.

அவர் இன்று நீரின் சக்தியைப் பற்றி நமக்குச் சொல்வதாக முன் வந்திருக்கிறார். நீரை ஒரு தெய்வமாகக் கொண்டாடுவது-கொண்டாடியது என்றே சொல்ல வேண்டும்-நம்முடைய நாடு. அப்பு என்பது நம்முடைய பஞ்ச பூதங்களில் ஒன்று. வருணன் என்பவர் நம் நாட்டு நீர்த்தேவதை. அத்தெய்வத்தைக் குறித்து நம் நாட்டிலே ஜபங்கள் செய்யப்படுகின்றன. அத் தெய்வத்தின் சக்தியை

மந்திரத்தால் மேற் கொண்டு வருணாஸ்திரம் என்ற மிகச் சிறந்த போர்க் கருவி ஒன்று முற்காலத்தில் மகாவீரர்களால் கையாளப்பட்டது என்று நமது இதிகாசங்களில் உள்ள கதைகள் கூறுகின்றன.

அவைகளைப் பற்றி நமது நண்பர் சொல்லப்போவதில்லை. நீரின் சக்தி முழுவதையும் பற்றி அவர் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் அது மிகப் பெரிய விஷயம்; மிகப் பரந்த விஷயம். அதன் அம்சங்கள் ஒரு சிலவற்றைப் பற்றியோ அல்லது ஏதாவதொரு குறிப்பிட்ட அம்சத்தைப் பற்றியோ மட்டும் அவர் சொல்வார் என்று நினைக்கிறேன்.

கண்ணப்பர் :—நான் சொல்லப்போகும் விஷயத்தைப் பற்றி நண்பர் உங்களுக்கும் எனக்கும் எச்சரிக்கை செய்ததற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். நான் ஆசையோடு கவனித்து வரும் விஷயங்களை விரிவாகச் சொல்வதில்-கேட்பவர்கள் இருந்தால் — எனக்கு திருப்திதான். ஆனால், கேட்டவர்களுக்கு அலுப்பு ஏற்பட்டுவிடும். இதை நினைவில் வைத்துக்கொண்டு ஒரு சில விஷயங்களை இன்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நீர் என்பது ஒரு திரவப் பொருள். அதற்கு என்று ஒரு தனி உருவம் கிடையாது. ஒரு மெல்லிய துரும்பை அதில் இட்டாலும் அதைத் தடுக்கச் சக்தி இல்லாமல் விலகி வழி விடும் தன்மை உள்ளது நீர். அது குளிரால் உறைவது; வெயிலால் ஆவியாவது. இரு வகையாகவும் தன்னுடைய தனி நிலைமையைப் பாதுகாக்கும் வலிமை பெற்றது. இப்படிப்பட்ட நீருக்குச் சக்தி ஏது?—என்று கேட்பது நியாயமாகவே தோன்றும்.

சக்தி உடையதுதான். ஆனால் நீரானது மிகுந்த சக்தி உடையது என்பது எத்தனையோ வகையாக நமக்கு நிரூபிக்கப்படுகிறது. மலையிலிருந்து குதிக்கும் அருவியும், ஓடிச் செல்லும் ஆற்றின் வெள்ளமும், அலைகள் புரளும் கடலும், வானம் பெயர்ந்தது போல் பொழியும் மழையும் பெரும் சக்தி உடையவை என்பதை நாள்தோறும் நிகழும் நிகழ்ச்சிகளால் நாம் நன்கு அறிவோம். வீழும் நீர் மின்சாரத்தை இயற்றுகிறது; ஆயிரக் கணக்கான இயந்திரங்களை இயக்குகிறது. ஓடும் நீர் பாறைகளையும் மலைகளையும் புரட்டுகிறது. அத்துணைச் சக்தியுடையதாக அது இருக்கிறது. கடலில் விழும் ஒவ்வொரு ஆறும் தன்னுடைய நீர் அரித்த மண்ணையும் மணலையும் கடலின் உள்ளே கொண்டு சேர்க்கிறது. அதாவது பூமியின் சொத்தைப் பறித்துக் கடலில் கொட்டுகிறது. கடலின் அலைகள் காற்றில் கிளம்பி கரையை மோதிப் புடைத்து நிலத்தைக் கவர்கின்றன. கடலின் ஏற்றவற்றம் இப்பொழுது உலகின் சில பகுதிகளில் மின்சாரத்தை இயற்

றித் தருகிறது. இன்னும் மேன் மேலும் அவ்வாறு செய்ய அது பயன்படுத்தப்படும் என்று விஞ் ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் இத்தகைய பெரிய நீர்ப் பகுதிகளையெல்லாம் விட்டு விட்டு, சிற்றளவில் உள்ள நீரின் சக்தியைச் சிறிது கவனிப்போம்.

பீச்சும் நீர், அது உள்ளாக் கப்படும் அழுத்தத்திற்கு ஏற்ற படி, மெதுவாகவோ வேகமா கவோ வெளியே வருகிறது. விரை வாக வெளிப்படும் நீர் சக்தியை உடையதாகக் காணப்படுகிறது. காரின் உட்புறத்தைச் சுத்தம் செய்வதற்காக பீச்சாங்குழலின் வாயிலிருந்து வெளிப்படும் நீரா னது அழுக்கை நீக்குவதற்குத் தக்க வேகத்தோடும் காரின் உட்புற உறுப்புக்களுக்குத் தீங்கு உண்டாக்காதபடி மெதுவாகவும் செலுத்தப் படவேண்டும். பீச் சாங்குழலின் பிஸ்டனின் அழுத் தத்திற்கு ஏற்றபடி குழலின் மூக்கிலிருந்து வெளிவரும் நீரின் வேகம் மிகுதியாகவோ குறை வாகவோ இருக்கும். எவ்வள வுக்கெவ்வளவு அதிக அழுத் தம் பீச்சங்குழலின் • உட்புறத் தில் உள்ள நீரின்மீது செலுத் தப்படுகிறதோ அவ்வளவுக்கவ் வளவு விரைவாகக் குழாயின் மூக்கிலிருந்து நீர் வெளிப்படும். ஆகவே, அந்த நீர்த் தாரையின் வேகமும், சக்தியும் அழுத்தத் திற்கு நேர் விகிதமாக இருக்கும். தீயணைக்கும் என்ஜின்களின் குழாய் நுனிகளிலிருந்து பீச்சும் நீர் எவ்வளவு வேகமாகவும், எவ் வளவு உயரம் வரையும் பாய் கிறது என்பதை நாம் பார்த் திருக்கலாம். இந்த நீர்த் தாரை யானது திரவமாக உள்ள நீரி னால் அமைந்தபோதிலும் மிகுந்த சக்தி வாய்ந்ததாக இருக்கிறது.

வாயுவின் அழுத்தத்தைப் போல நான்கு அல்லது ஐந்து மடங்கான அழுத்தத்தினால் தீய ணைக்கும் குழாயின் நுனியிலி ருந்து நீர் தாரையாக வெளிப் படுமானால், அந்தத்தாரை இரும்புபோன்ற வலிமை உடைய தாக இருக்கும். ஒரு மரத்தடி யின் மீது அந்தத்தாரை செலுத் தப்படுமானால், அது அந்தத் தடியை உலர்ந்த சுள்ளியைப் போல் எளிதில் முறித்து விடும்.

இது ஒரு பரிசோதனைத் துறைக் காரியமேயாயினும் உண் மையில் நடைமுறையில் இத் தகைய தாரைகளால் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி யைப் பெயர்த்தெடுக்கிறார்கள். இந்த நீர்த் தாரையால் தாக்கப் பட்ட நிலக்கரிச் சுவர் தகர்த்து, உதிர்ந்து பின்வாங்கிச் செல் கிறது.

இவ்வளவு அழுத்தத்தினால் இயங்கும் நீர்த்தாரை இத்துணை சக்தியுடையதாக இருக்குமா னால், வாயுவின் அழுத்தத்தைப் போல் நூறு மடங்கு, அல்லது ஐந்நூறு மடங்கு. அல்லது ஆயி ரம் மடங்கு அழுத்தத்தால் வெளிவரும் நீர்த்தாரை தாங்க முடியாத சக்தியை உடையதாக

இருக்கும் என்றுதானே எதிர்பார்ப்போம்? இதிலும் சந்தேகமா? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆனால் விஞ்ஞானிகள் செய்த சிற்சில சோதனைகளிலிருந்து இந்த முடிவு சரியானது அல்ல என்று நினைக்க இடம் ஏற்பட்டது. மிக அதிக அழுத்தத்திலே வெளியே பீச்சும் நீர்த்தாரையின் தன்மைகளைப் பல்வேறு நாடுகளில் விஞ்ஞானிகள் சோதித்து வந்தார்கள். அவர்கள் கொண்ட முடிவு என்னவென்றால், மேன்மேலும் நீரின்மீது உறைக்கும் அழுத்தம் ஏற ஏற அதனால் வெளிப்படும் நீரின் சக்தி, வலிமை, அதிக அழுத்தத்திற்கு மேற்பட்டு விட்டால், நீர்த்தாரையானது சக்தி குறைந்துபோகிறது என்பதுமாகும்.

இதற்கு அவர்கள் ஒரு காரணமும் கூறினார்கள். அப்போது குழாயின் மூக்கிலிருந்து வெளியே பீச்சுவது நீர்த்தாரை அன்று; பிரிந்து மிக மிக நுண்மையாகத் தகர்க்கப்பட்ட தண்ணீர் அணுக்களால் அமைந்த கெட்டி மேகமே அது. ஆகையால் தான் அந்தத்தாரை நீரின் தன்மையை இழந்து, வாயுவின் தன்மையை ஓரளவு பெற்றுவிடுகிறது. வாயுத்துகள்களைப் போல் மிக நுண்மையாகப் பகுக்கப்பட்டபடியால் நீர்த்தாரையின் சக்தி குறைந்து போகிறது. இதுவே அவர்கள் கூறிய விளக்கம்.

இப்படிப்பட்ட நீர்த் தாரையின் வேகம் இன்னும் அதிகம் ஆகும்படி, உட்புறமுள்ள நீரை இன்னும் அதிகமான அழுத்தத்திற்கு உட்படுத்தினால் என்ன ஆகும்? இந்த ஆராய்ச்சியை அதிமிகு அழுத்த ஆராய்ச்சி என்று சொல்லலாம்.

இத்தகைய ஆராய்ச்சியை ரஷ்ய நாட்டு விஞ்ஞான நிலையம் மேற்கொண்டது. அங்குள்ள பௌதிக விஞ்ஞானிகள் ஒரு மிகச்சிறந்த நீர் அழுத்தக் கருவியை இயந்திரத்தை என்று சொல்ல வேண்டும் - அமைத்தார்கள். வாயுவின் அழுத்தத்தைப் போல் இரண்டாயிரம் மடங்குள்ள அழுத்தத்தைச் செலுத்தி நீர்த் தாரையை வெளியேற்றியது அந்த இயந்திரம். அதி விரைவான வேகத்தோடு குழாய் மூக்கிலிருந்து நீர்த்தாரை வெளிப்பட்டது.

இந்த நீர்த் தாரையின் சக்தியைப் பலவகையாகச் சோதித்தார்கள். விஞ்ஞானிகள் அதுவரை நினைத்து வந்ததற்கு நேர்மாறாக அந்தத் தாரை செயல் புரிந்தது. அதிமிகு வேகத்தோடு வெளிப்பட்ட நீர்த்தாரையானது அப்போது வலிமையற்ற நுண்ணிய நீர்த்துகள்களால் அமைந்த உருவ மற்ற மேகமாகக் காட்சியளிக்கவில்லை. அது தனி உருவம் உடையதாகக் காணப்பட்டது. அழுத்தம் இன்னும் மிக மிக, அந்த நீர்த்தாரை இறுகிய வடிவத்தை ஏற்றது. மிக்க திண்மையைப் பெற்றது; அது மிகுந்த சக்தி உடையதாகக் காணப்பட்

டது. இரண்டு மில்லி மீட்டர் கனம் உள்ள எஃகுக் கத்தி ஒன்றின்மீது அந்த நீர்த் தாரையை எய்தபோது, அந்த எஃகுக் கத்தியை அந்த நீர்த்தாரை துவாரமிட்டுத் துளைத்துக் கொண்டு அப்பால் சென்றது.

ஆகவே, நீரும் இரும்பைக் காட்டிலும் வலிமை யுடையதாக ஆகிவிடக்கூடும் என்று அந் நாட்டு விஞ்ஞானிகள் சோதனைகளின் மூலம் கண்டு பிடித்திருக்கிறார்கள். இன்னும் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

கேள்வி: நீரின் சக்தியை வெகுகாலமாக உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஏதாவது விவரங்கள் சொல்ல முடியுமா?

விடை: மிகப் பழங்காலத்தில், எகிப்து நாட்டில், நீர் உருளைகளையோ, திருகுகளையோ உபயோகித்து நைல் நதியிலிருந்து நீரை டர்பைன் கருவியால் மின்சாரத்தை இயற்றுவதற்கான ஏற்பாடு. 1. மின்சாரத்தை இயற்றும் இயந்திர சாலை. 2. சுழலும் தண்டு உள்ளடங்கிய குழாய். 3. நீர்த்தேக்கத்திலிருந்து நீரை டர்பைனுக்குக் கொணரும் பெருங் குழாய். 4. நீர்த் தேக்கம். 5. கருவியைச் சுழற்றிய பிறகு சக்தி குறைந்த நீர். 6. சுழல் சக்கிரம் பொருந்திய டர்பைன் கருவி. இவ்வகையான ஏற்பாடுதான் மேட்டூர், பைக்காரா முதலிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இறைத்து நிலங்களுக்குப் பாய்ச்சிச் சாகுபடி செய்து வந்தார்கள். பிறகு, வேறு பல நாடுகளிலும், நீரின் சக்தியால் சக்கரங்களைச் சுழலச் செய்து இயந்திரங்களை இயங்கச் செய்து சக்தியை இயற்றி வந்தார்கள்.

கீழ்ச் சுழல் நீருருளை, மேல் சுழல் நீருருளை, பெல்ட்டன் சக்கரம், டர்பைன் என்னும் மின்சாரத்தை இயற்றும் கருவி ஆகியவை யாவும் நீரின் சக்தியைப் பல வகையாகப் பயன்படுத்துவதற்கான கருவிகள்.

—'தினமணி சுடர்.'

******************************************

# எத்தனை விந்தைகள்!

(நூலண்ணன்)

*******************************************

அரசியலில் மட்டுமின்றி இயற்கை அமைப்பிலேயே விந்தைகள் நிறைந்தது காங்கோ. இந்த ஆப்பிரிக்க நாட்டிலுள்ள இட்டுரிக் காடு மிக அடர்த்தியானது. இதற்குள் எத்தனை விந்தைப் படைப்புகள் ஒளிந்துகொண்டிருக்கின்றன தெரியுமா? இதற்குள் வாழும் "குள்ளர்கள்" அதிசயப் பிறவிகள். இவர்களில் நெட்டையானவனே நாலடிதான்! ஆனாலும் பெரிய யானைகளை எல்லாங்கூட பிடித்து விடும் இக் கூட்டம். இந்த விந்தை மனிதர்களைப் பற்றிய சுவையான கட்டுரை இது.

இட்டுரிக் காட்டில் வாழும் மக்கள் பலவகையினர். அவர்களில் அதிகமானவர்கள் பிக்மி எனப்படும் குள்ளர்கள். டிகி-டிகி என்ற பெயருடைய ஒரு பிக்மி இனம்தான் இட்டுரிக் காட்டில் காணப்படுகின்றனர். பிக்மிகளில் ஆண்கள் அதிக பட்சமாக வளரும் உயரம் நாலடியாகும். அவர்களின் எடை எண்பது பவுண்டுகள்தான். பெண்கள் இந்த அளவிற்கும் சற்று குறைந்தவர்கள். பிக்மிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் நம்பமுடியாத அவ்வளவு சிறியதாகப் பிறக்கின்றன.

இவர்களின் உடலமைப்பு கச்சிதமானது. பிக்மிகளே, ஆப்பிரிக்காவின் ஆதிக்குடிகளின் வழித்தோன்றல்கள் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் துணிபு. பிற ஆப்பிரிக்கரைப் போலன்றி இவர்களுடைய தோல் தாமிர நிறமானது; அமெரிக்காவின் சிவப்பிந்தியர்களைப்போல.

டிகி-டிகிக்கள் மகிழ்ச்சி நிறைந்த மக்கள். எப்போதும் களிப்புடன் காணப்படுவார்கள். அசாதாரணமான தைரியம் உடைய நல்ல வீரர்கள். ஓரிடத்தில் தங்காமல் அலைந்து திரிந்து வேட்டையாடுவார்கள். சில நாட்களுக்குமேல் ஒரு இடத்தில் இவர்கள் தங்குவதில்லை. வேளாண்மை இவர்கள் அறியாதது. இவர்களுக்கு அது தெரியவும் வேண்டியதில்லை. காட்டுக்கு வெளியே உள்ள பிற ஆப்பிரிக்கர்களுக்கு, பிக்மிகளில் அநேகமாக எல்லாரும் அடிமைகளாகத்தான் இருக்கிறார்கள். தம் ஆண்டைகளுக்காக, இந்த அடிமைகள் வேட்டையாடி காட்டுப் பொருள்களைக்கொண்டு சேர்ப்பார்கள்.

பிக்மிகள் வாழும் இருப்பிடத்தை முதல் முதலில் காண்

பது நல்ல அனுபவம். வெளியார் வருவதைத் தொலைவில் உள்ள போதே அவர்கள் அறிந்துகொள் வார்கள். முன்கூட்டியே அறி விக்காமல் வரும் வெளியார்கள் பிக்மிகள் யாரையும் காணமுடி யாது. வெளியார்களுடன் பழகு வதற்கு அவர்கள் மிகவும் பயப்படு கின்றனர்.

காட்டுக்குள்ளே பிக்மிகள் போய்வரப் பயன்படுத்தும் தடங் களைக் கண்டுபிடிப்பதும் கடினம். குள்ளர்களானபடியால், அவர் களின் பாதை வெகு குறுகலாயும் சிறியதாகவும் இருக்கும்.

இட்டுரிக்காட்டின் இப்பகுதி யில் பரிபூரண அமைதி நிலவு கிறது. இந்த நிசப்தமான காட்டு உலகத்தில் மனிதர்களும் வாழ் கிறார்கள் என்றால் அதற்கு எந்த விதமான சான்றும் தென்படுவ தில்லை.

இங்கே நடமாடும்போது வெகு விழிப்புடன் இருக்கவேண் டும். வெறும் குச்சிபோல் தோன்றுவது கொடிய பாம்பாக இருக்கலாம். இலைகளுக்கிடையில் புள்ளி புள்ளியாக' சூரிய வெளிச் சத்தைப்போலத் தென்படுவது, பதுங்கியிருக்கும் சிறுத்தையாக இருக்கலாம்.

குள்ளர்கள் வாழும் வீடுகளும் விநோதமானவை. இவ் வீடுகள் மூன்றடி உயரம்கூட இருக்காது. கொம்பு, கிளைகளைக் கொண்டு, இலை தழைகளால் மூடப்பட்ட இவ்வீடுகள் சுற்றிலுமிருக்கும் செடி கொடிகளினின்றும் வேறு கத் தென்படாது. வீட்டினுள்ளே எந்தவிதமான சாமான்களும் கிடையாது. படுக்கைக்குப் பதில் விரித்த வாழை இலை காணப்படும். அடுப்பும், சமையல் பானைகளும் இல்லை; குள்ளர்கள், இறைச்சி யைப் பச்சையாகவும், புகையி லிட்டும் தின்கிறார்கள். இவர் களுடைய சொத்தெல்லாம் வில், அம்பு, ஈட்டி ஆகியவைதான். இடம் மாறும்போது பச்சைக் குழந்தைகளைத் தவிர, இவர்கள் தூக்கிச் செல்வதற்கு வேறொன் றும் இல்லை.

குரங்குகளைப்போல மரமேறத் தெரிந்தவர்கள் இக் குள்ளர்கள். நிலத்தில் இறங்காமலேயே, வெகுதூரம் மரங்களின் வழி யாகவே பயணம் செய்ய வல்லவர் கள். முதலையிடம் இவர்களுக்கு மிகவும் பயம் உண்டு. எனவே, ஆற்றில் இறங்குவது கிடையாது. ஆகவே நீந்தவும் தெரியாது. இக் காரணங்களால், குள்ளர்கள் ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் அமைப்பதில் வல்லவர்களாகத் திகழ்கிறார்கள். 'லையானா'க் கொடிகளைக் கயிற்றுக்குப்பதிலாக உபயோகித்து, ஆபத்தான ஆனால், திறமைமிக்க பாலம் கட்டும் வேலையைச் செய்து முடிக் கிறார்கள்.

காட்டு மக்களிலெல்லாம் சிறந்த வேட்டை நிபுணர்கள் இக்குள்ளர்கள். அடிபற்றிப் பின் தொடர்வதில் இவர்களை மிஞ்ச யாராலும் முடியாது. அரசினர் ஆணைப்படி இவர்கள் துப்பாக்கி முதலிய ஆயுதங்களைப் பயன்படுத்

தக்கூடாது. எனவே தற்காப்புக்கும், உணவுக்கும் பரம்பரை ஆயுதங்களையே நம்பியுள்ளனர். குறிபார்த்து அம்பெய்யும் இவர்களின் திறமை ஆச்சரியமானது. ஒன்றன்பின் ஒன்றாக மூன்று நான்கு அம்புகளைத் தொடர்ந்தாற்போல விரைவில் விடுவார்கள். முதல் அம்பு இலக்கைச் சேர்வதற்கு முன்பாகவே, கடைசி அம்பும் வில்லை விட்டுப் பாய்ந்து விடும்.

ஓரோர் சமயம் குறி தவறுவதும் உண்டு. அப்போது குள்ளனுக்கு வெகு ஆத்திரம் உண்டாகும். கையிலிருக்கும் அம்புகளை முறித்துக் கீழே போட்டுவிட்டுக் குதியாய்க் குதிப்பான். அம்புகள் என்று பெயரே ஒழிய, அவை கூர்மையாக்கப்பட்ட வெறும் தட்டுக் குச்சிகள் தான். மறு நுனியில் இரண்டொரு இலைகள் நேராகப் பாயவென்று, கட்டப்பட்டிருக்கும்.

சிறிய மிருகங்களைக் குள்ளர்கள் வலைகட்டிப் பிடிக்கின்றனர். கெட்டியான நார்களைக் கொண்டு இவ்வலை தயாரிக்கப்படுகிறது. காட்டிலே நீளமாகத் தரைமட்டத்திற்கு வலையைக் கட்டிவிடுவார்கள். வலைக்கப்பாலிருந்து பெரிய அரைவட்டமான வடிவத்தில் ஆண்களும் பெண்களுமாக நின்று கொண்டு பேரிரைச்சலைக் கிளப்புவார்கள். வலைக்கும், குள்ளர்களுக்கும் இடையிலிருக்கும் மிருகங்கள் மிரண்டு ஓடத்தொடங்கும். அவற்றில் பல வலையில் சிக்கிக் கொள்ளும்.

இக்குள்ளர்களிடம் மாமத யானைகளும் தப்புவதில்லை. பெரிய குழிகளை வெட்டி அவற்றைக் கண்ணுக்குத் தெரியாமல் இலை, தழை சருகு முதலியவற்றால் மூடி வைத்து விடுவார்கள். யானைகள் இக்குழியில் விழுந்தவுடன் கொன்றுவிடுகிறார்கள். குழியில் வீழ்த்திக் கொல்லுவதல்லாமல், நேராகத் தாக்கியும் யானைகளைக் கொல்கிறார்கள்.

யானையின் சாணத்தை உடல் முழுதும் பூசிக்கொண்டு சில பொறுக்கியெடுக்கப்பட்ட மனத்திடம் உடைய வீரக் குள்ளர்கள் காட்டில் மேயும் யானையை நெருங்குவார்கள். யானை அறியாதபடி அதன் கால்களுக்கிடையில் நுழைந்து, யானையின் அடிவயிற்றில் ஈட்டியைப் பாய்ச்சி விட்டுத் தூர ஓடிவிடுவார்கள். ஈட்டியில் நஞ்சு தோய்க்கப்பட்டிருப்பதால், யானை இறந்து போவது உறுதி. ஆனால், அதற்குள் எங்கெங்கெல்லாமோ ஓடிச் செல்லும். அதைத் தொடர்ந்து சென்று, தேவைப்பட்டால் இன்னும் ஒன்றிரண்டு ஈட்டிகளைப் பாய்ச்சி, யானையைக் கொன்று தீர்ப்பார்கள்.

இவர்களது பழக்க வழக்கங்களில் நமக்கு அதிர்ச்சியை ஊட்டுவது, இவர்களுடைய அதிசயமான சாப்பிடும் திறமைதான். எவ்வளவு வேண்டுமானாலும் தின்பதற்குத் தயங்க மாட்டார்கள். குள்ளன் இறைச்சியை வேண்டுமளவு தின்று விட்டு,

அதைத் தொடர்ந்து ஒரு தார் வாழைப்பழங்களை (அறுபது பழங்களுக்குக் குறையாத)யும் விழுங்கிவைப்பான். அப்புறம் கட்டாந்தரையில் படுத்துக் கொண்டு இரவெல்லாம் அரற்றிக் கொண்டே இருப்பான். விடிந் தெழுந்ததும், மறுபடியும் அதே மாதிரி தின்பதற்குச் சற்றும் சளைக்கமாட்டான். அதை ஒரு பொருட்டாகவும் மதிக்க மாட்டான். அந்தச் சிறிய உடலில் தான் எத்தனைப் பெரிய வயிறு! எவ்வளவு பெரிய பசி!

பிக்மிகள் உப்பைப் பெரிதும் விரும்புகிறார்கள். காட்டில் உப்பு கிடையாததால், அவர்களுடன் பண்டமாற்று வாணிகம் செய்யும் வெளியார்கள் உப்பைக் கொடுத்து, பல காட்டுப் பொருள் களை பிக்மியிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்.

பிக்மிகளின் வாழ்க்கை வெகு கடினமானது என்று நமக்குத் தோன்றுகிறது. என்றாலும், அவர்கள் மிக ஆனந்தமாகத்தான் எப்போதும் காணப்படுகிறார்கள். தம்மைத் தாமே 'குள்ளர்கள்' என்று சொல்லிக் கொள்கின்ற னர். இவர்களது மொழியைக் கற்கின்ற வெளியார் வெகு குறைவு. பிற ஆப்பிரிக்கர்களை 'உண்மையான மனிதர்கள்' என்று குறிப்பிடுகின்றார்கள்.

பிக்மிகளை ஒட்டி வாழும் இன் னொரு மக்கள் இனத்தவர் மாங் பெடு எனப்படுபவர்கள். காங்கோ விற்குக் கிழக்கே காணப்படும் வடுசி மக்களைப் போல் உயரமான வர்கள் அல்லவென்றாலும், மாங் பெடுக்கள் பிக்மிகளைவிட உயர மானவர்கள். இட்டுரிக்காட்டின் வெளிப்புற ஓரங்களில், வாழ்கின் றனர். இவர்களுக்கும் பிக்மி களுக்கும் ஏராளமான வேற்று மைகள் காணப்படுகின்றன.

மாங்பெடுக்கள் வாழும் குடி யிருப்புக்குச் செல்லும் வழி, பிக் மிகளுடையதைப் போல் தெரிந் தும் தெரியாமலும் இருக்காது. இக்கொடிவழியின்களிமண் தரை, நடந்து நடந்து, சிமெண்டுப் பாதையைப் போல் கெட்டிப் பட் டிருக்கும். காட்டெருமையின் கூர்மையான குளம்புகள்தான், இத்தரையில் சிறு கீறலை உண் டாக்க முடியும். வழிநெடுகிலும் மரக்கிளைகளில் குரங்குகள் காணப்படும். கீழே செல்கின்ற வர்மீது குச்சி, கொப்பு முதலான வற்றை அவை, ஒடித்துப் போடும்.

காட்டின் இருண்ட பகுதி யைத் தாண்டியதும், புல் வெளி காணப்படுகிறது. ஆள் உயரத் திற்கும் மேல் வளர்ந்துள்ள இப் புற்காட்டின் வழியே செல்லச் செல்ல புற்கள் குறைந்து பரந்த மைதானம் தென்படுகிறது. சோலை போன்ற இம் மைதானத் தில் அங்குமிங்கும் சில மரங்கள் காணப்படும். இடையில் காணப் படும் புற்றரை மிக கவனத்துடன் பேணப்பட்டிருக்கும். மா நிழ லில் பல வட்டமான குடிசைகள் அமைந்துள்ளன. இவைதான் மாங்பெடுக்கள் வாழும் குடி யிருப்பு ஆகும்.

இத்தகைய கிராமத்தில்வாழும் மாங்பெடுக்களின் கலாசாரம் சிறப்பானது. மாங்பெடுக்களில், கலைஞர்கள், சிற்பிகள், இசை வல்லுநர்கள், படகு கட்டுவோர், மந்திரவாதிகள், அறிஞர்கள் முதலான பலதிறத்தவர் உள்ளனர். இவர்களுடன் ஒப்பிடும்போது, பிக்மிகளின் வாழ்க்கை மிருக வாழ்க்கை எனத்தகும்.

மாங்பெடுக்களின் குடிசை உயர்ந்து, உச்சியில் கூம்பி கூர்மையாக இருக்கும். புற்களால் வேயப்பட்டிருக்கும். குடிசையின் சுவர்கள் காரையைக் கொண்டு எழுப்பப்பட்டவை. சுவர்களில் கருப்பும், பழுப்பும் கலந்த நிறக்கலவைகளைக்கொண்டு அழகிய கோலங்கள் தீட்டப்பெற்றிருக்கும். வீட்டிற்குள் ஒவ்வொரு பொருளும் ஒழுங்கையும், தூய்மையையும் காட்டும். செம்மண்தரை மிகத் தூய்மையாகப் பெருக்கப்பட்டிருக்கும்.

இச்சோலைக் கிராமத்தில் அகன்ற, நன்கு மராமத்து பார்க்கப்பட்ட பாதைகள் மூங்கில் தோப்புகளுக்கு ஊடேயும் செல்கின்றன. அங்கேயும் நேர்த்தியாக அமைக்கப்பட்ட கட்டிடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில தானியக் களஞ்சியங்களாக இருக்கும். சில கருவிகள், மற்றும் தொழிலுக்கு வேண்டிய பொருள்கள் செய்யும் தொழிற்சாலையாக இருக்கும். சில, பல குடும்பங்கள் சமையல் செய்து கொள்ளும் மடப்பள்ளியாகவும் இருக்கும். கட்டிடங்களுக்குள்ளே, அதனதன் தொழில்கள் சுறுசுறுப்பாய் நடந்து கொண்டிருக்கும். தொழிற்சாலையில் மரப்பட்டையிலிருந்து உடை தயாரிக்கும் வேலை நடக்கும். தாவரச் சாயத்தைக் கொண்டு, அவ்வுடைகளுக்குச் சாயம் நனைக்கும் வேலை இன்னொரு புறம் நடக்கும். மடப்பள்ளியில் கிழங்கு மாவாக அரைக்கப்படும். மாவை உருண்டையாகப் பிசைந்து சமைக்கப்படும்.

மாங்பெடுக்களில் ஆண்கள் உயரமானவர்கள். வெண்கல நிறமானவர்கள். மரவுரித்துணியைக் கோவணமாகக் கட்டியிருப்பார்கள். இடுப்பில் ஒகாபியின்தோலை அரைஞாண் கயிறாகக் கட்டிக் கொண்டிருப்பார்கள். கோவணத்துணியில் பட்டை பட்டையாக வெள்ளையும் பழுப்பும் தீட்டப்பட்டிருக்கும். இவர்களது ஆடை இவ்வளவே.

மாங்பெடு மகளிரும் கம்பீரமானவர்கள். தம் தலைமுடியைச் சேர்த்து வாரி உச்சியில் கொண்டையாக முடிந்திருப்பார்கள். கண்கள் மேல்நோக்கிச் சாய்ந்திருக்கும். பளபளக்கும் செப்புக் கம்பிகளும், மணிகளும் இவர்களது ஆபரணங்கள்.

மாங்பெடுக்களின் மண்டை விநோதமான உருவம் உடையது. நீண்டு, உயர்ந்து, உச்சியில் கூம்பியிருக்கும். சிறு குழந்தையாக இருக்கும்போதே, மண்டையை நார்க்கயிற்றால் இறுகச் சுற்றிக்

கட்டிவிடுவார்கள். இயற்கையான மண்டை உருவத்தை இம்மாதிரி செயற்கையாக மாற்றி அமைப்பதை இவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். இதனால் அழகும், அறிவுப் பெருக்கமும் உண்டாகிறது என்பது இவர்கள் எண்ணம். நீண்ட வட்டமான மண்டை மூளைக்கு நல்லது என்ற இவர்களின் கருத்து ஒரு வேளை மெய்யாகவும் இருக்கலாம். ஏனென்றால் மாங்பெடுக்கள், மற்றெந்த காங்கோ மக்களையும் விட அறிவிற் சிறந்தவர்கள்.

மனிதன் காட்டை வென்று, காட்டை அடிமைப் படுத்தி, காட்டைக் கொண்டே இன்பமாக, கௌரவமாக, தன்மானத்துடன் வாழ முடியும் என்பதை மாங்பெடுக்களின் வாழ்க்கை நிரூபிக்கிறது.

---

## உங்களுக்குத் தெரியுமா ?

'பாட்மின்டன்' (பூப்பந்து ஆட்டம்) ஐரோப்பிய நாட்டு ஆட்டமா? அல்லது வேறு நாட்டு ஆட்டமா?

பெரும்பாலோர் இந்த ஆட்டம் ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த ஆட்டம் என்றே கூறுவர். ஆனால் அது உண்மையிலேயே நம் நாட்டு ஆட்டம். இந்த ஆட்டம் நம் நாட்டில் பல நூற்றாண்டுகளாக விளையாடப்பட்டு வந்திருக்கிறது. இது "பூனா" என்ற பெயர் பெற்றிருந்தது. நம்மை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களை இந்த ஆட்டம் மிகவும் கவர்ந்துவிட்டது. 1870–ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இந்தப் 'பூனா' ஆட்டத்தை ஆடத்தொடங்கினர். டியூக் ஆஃப் பியூபோர்டு எனனும் பிரபு, தம் சொந்த ஊராகிய பாட்மின்டன் என்னும் இடத்தில் இந்த ஆட்டத்தை ஆடத் தொடங்கிப் பிரபலப்படுத்திய பின்னர்தான் இதற்குப் பெரும் 'மவுசு' ஏற்படலாயிற்று. 'பாட்மின்டன்' என்ற பெயரும் அதற்கு ஏற்பட்டது.

பூமிக்கடியில் மிகமிக ஆழமாக வெட்டப்பட்டுள்ள சுரங்கம் எங்கு இருக்கிறது?

தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகான்ஸ்பர்க் என்ற இடத்தில் "கிரவுன் தங்கச் சுரங்கம்" ஒன்று இருக்கிறது. இதுவே உலகிலேயே மிக ஆழமான சுரங்கம். அதன் ஆழம் 9876 அடிகள். 1892-இல் தோண்டினார்கள். 1951–ஆம் ஆண்டுவரை 12,69,91,815 டன்கள் தங்கம் கலந்த மணல் வெளியேற்றப்பட்டது. இதற்கு அடுத்து ஆழமான தங்கச் சுரங்கம் நம் நாட்டிலுள்ள "கோலார் தங்கச் சுரங்கம்"தான். இதன் ஆழம் 9757 அடிகள்.

— போதனா விஷயப் பூங்கொத்து

தொடர் நாடகம் :

# பாவத்தின் நிழல்

—[ தாமரைக் கண்ணன் ]—

[சென்ற இதழ் தொடர்ச்சி.]

## காட்சி 3

**காலம் :**—*மலைவாயில் மாலைக் கதிரவன்*

**இடம் :**—*முல்லை நாட்டு அரண்மனையில், புத்தர் மண்டபம்*

**இருப்போர் :**—*முல்லை நாட்டு மகாராணி புவனேஸ்வரி, அமைச்சர் மகிபாலர், வணிகனைப் போன்ற மாறுவேடத்தில் ஒற்றன் பூபதி.*

*[புத்தர் திருவுருவச் சிலையின் முன்பு அரசி புவனேஸ்வரி, காணாமற்போன தன் குழந்தையை எண்ணி எண்ணி உள்ளம் நைந்து கொண்டிருக்கிறாள். அருகில் அமைச்சர் மகிபாலர்...!]*

**புவனேஸ்வரி :**—(*மனக் கலக்கத்துடன்*) *அமைச்சரே! அமைச்சரே...! முல்லை நாட்டின் இளவரசன்... என் கண்ணின் கருமணி... என் ஆருயிர்க் குழந்தை திடீரென்று மாயமாக மறைந்துவிட்டானே, அமைச்சரே...!*

**மகிபாலர் :**—*எட்டுத் திக்கும் வீரர்களை அனுப்பியுள்ளேன், மகாராணி! அவர்கள் நல்ல சேதியோடு திரும்பி வருவார்கள்.*

**புவனேஸ்வரி :**—*எனக்கு ஆறுதல்மொழி கூறுகிறீர்களா, அமைச்சரே! இரண்டு நாட்கள் ஆகியும் இன்னும் ஒரு சிறு தகவல் கூடக் கிடைக்கவில்லையே.........*

**மகிபாலர் :**—*மகாராணி! உங்கள் துன்பம் எங்கள் துன்பம். துன்பத்தைக் கண்டு மனம் வருந்துவதைவிட அதைப் புன்முறுவலால் வெல்வதே நல்லது. இதோ—அருள் சுரக்கும் முகத்தோடு அமர்ந்திருக்கும் கருணைக்கடல் புத்தருடைய திருவுருவச் சிலையைப் பாருங்கள். அமைதியும் அன்பும் பொழியும் அவர் கண்கள் தங்களுக்கு மன ஆறுதலை உண்டாக்கும்.*

**புவனேஸ்வரி** :—மன ஆறுதலை நாடித்தானே, அமைச்சரே...... புத்தர் மண்டபத்தைச் சரணடைந்து கிடக்கிறேன். இருந் தாலும், கண்ணுக்குக் கண்ணான என் கணவர், களத்தில் வீழ்ந்து உயிர் மாய்ந்தபோது நான் பட்ட வேதனையை விட, என் கண்ணின் கருமணியைக் காணுமல் இழந்துவிட்டிருக்கும் இந்த நேரத்தில் அதிக வேதனைப்படுகிறேன்.

**மகிபாலர்** :—(பேச்சை மாற்றி) ...ம்... மறந்து விட்டேன், மகா ராணி' யாரோ ஒரு வைர வியாபாரி...... தங்களைக் காண விரும்புகிறான். மண்டபத்திற்கு வெளியில் இருக்கிறான். அழைக்கட்டுமா......?

**புவனேஸ்வரி** :—அவாவை வெறுக்க வேண்டும் என்று புகன்ற போதி மரத்துப் புத்தர் சந்நிதியிலா அணிமணிகளைப் பார்வை யிடுவது? வேதனைத் தீயில் வெந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில். வைர அணிகளைத் தேர்ந்தெடுக்கும் மனநிலையில் நான் இல்லையே?. நேரமும் முன்னிரவு நேரம்... !

**மகிபாலர்** :—தங்களை நேரில் கண்டு இரண்டு தினங்கள் நம் அரண் மனையிலேயே தங்குவதற்கு அனுமதி பெறவேண்டும் என்று அவன் துடிக்கிறான். (சற்று குரலைத் தாழ்த்தி) ...ம்... தாங் கள் அவனை நேரில் சந்திக்க வேண்டும் என்று நானும் விரும்பு கிறேன்.

**புவனேஸ்வரி** :—சரி ! அழையுங்கள்......

**மகிபாலர்** :—(வெளியே திரும்பி) வணிகரே ! உள்ளே வாருங்கள்...

[வைர வணிகனை இருக்கும் பூபதி உள்ளே வருகிறான்.]

**வணிகன்** :—(கரம் கூப்பி) வணக்கம், மகாராணி ! வைர வணிகன் தனவந்தன் வணங்குகிறேன். வாழ்க, தங்கள் கொற்றம் !

**புவனேஸ்வரி** :—(கூர்ந்து நோக்கி) உமக்கு என்ன வேண்டும்...?

**பூபதி** :—விலை யுயர்ந்த வைரங்கள் என்னிடம் உள்ளன. தங்கள் நல் ஆட்சியில் மக்கள் வளமான வாழ்க்கை வாழ்வதாகக் கேள் விப்பட்டு இங்கு வந்தேன். மகாராணியார், அனுமதித்தால் அரண்மனையின் ஒரு புறத்தில் தங்கியிருந்து பாதுகாப்போடு என் வியாபாரத்தைச் செய்ய ஏதுவாகும்.

**புவனேஸ்வரி** :—அரண்மனையிலேயே பாதுகாப்பு வேண்டும் என் கிறீரே ! எங்கள் நாட்டில் கள்வர் பயம் இருக்கலாம் என்ற

எண்ணமா? அல்லது, வெளியில் உலவும்போது உங்கள் தொழிலுக்கு இடையூறு ஏற்படலாம் என்ற அச்சமா?

**பூபதி** :—(மகாராணி தன்னைப் புரிந்துகொண்டிருப்பாளோ என்ற அச்சமும் திகைப்பும் மேலிட) ...ஆ... ஆ...ங்... அப்படியில்லை, மகாராணி! அரசியாரின் திருக்கோயிலில் தங்கியிருப்பதில் எனக்கு ஒரு பெருமை... அவ்வளவுதான்!

**புவனேஸ்வரி** :—சரி!... அமைச்சரே! பூங்காவை அடுத்துள்ள பளிங்கு மண்டபத்தில் இந்த வியாபாரிக்கு ஒரு இடம் ஒதுக்கித் தாருங்கள். அத்துடன், நம்பிக்கையுள்ள நமது ஆள் ஒருவர், இரவு பகலாக இவர் பக்கத்திலேயே இருப்பதற்கும் ஏற்பாடு செய்யுங்கள்.

**பூபதி** :—(திகைத்து) மகாராணியார், என்னுடன் ஒரு ஆள் இருக்கவேண்டும் என்று ஏன் சொல்லுகிறார்களோ தெரியவில்லை.

**மகிபாலர்** :—(குத்தலுடன்) காரணமாகத்தான், பூபதி! உன் நெஞ்சத்தில் எவ்வளவுதான் துணிச்சல் இருந்தாலும், வேவு பார்ப்பதற்காக எங்கள் அரண்மனையிலேயே வந்து தங்கியிருக்கும் சமயத்தில் உன் இதயம் கணத்திற்குக் கணம் கலங்கிக் கொண்டுதானே இருக்கும்?

**பூபதி** :—(அதிர்ச்சியால் நடுங்கி) ...ஆ!...

**புவனேஸ்வரி** :—திகைக்காதே, பூபதி! நீயும் எவ்வளவோ திறமையுடன்தான் தாடி மீசையை ஒட்ட வைத்திருக்கிறாய். என்ன செய்வது? உன் இடது கண்ணின் கீழே இருக்கும் வடு, உன்னை எங்களுக்குக் காட்டிக்கொடுத்துவிட்டது. நான் உன்னை எளிதில் கண்டுபிடித்துவிடுவேன் என்ற நம்பிக்கையால்தான் எங்கள் அமைச்சர்கூட, உன்னை வணிகன் என்றே எனக்கு அறிமுகப்படுத்தினார். இல்லையா, அமைச்சரே!

**மகிபாலர்** :—ஆமாம், மகாராணி! எத்தனை பிறவி எடுத்தாலும் எந்த வேடம் தரித்தாலும் பூபதியை நாம் புரிந்துகொள்வோம் என்பதை அவன் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை.

**புவனேஸ்வரி** :—இருக்கட்டும், அமைச்சரே! பூபதிக்கு அறுசுவை உணவும் பாலும் பழமும் தாங்களே அருகில் இருந்து கொடுத்து, அவன் பயமில்லாமல் பளிங்கு மண்டபத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். (பூபதியை நோக்கி) பூபதி! நீ அஞ்சாமல் செல். நீ இந்த அரண்மனையில் இருக்கும்வரை

இங்கு உள்ளவர் யாராலும் உனக்கு ஒரு சிறு துன்பம்கூட நேராது. ஏதாவது குறை நேர்ந்தால், நீ எந்த நேரத்தில் விரும்பினாலும் என்னை இதே இடத்தில் வந்து சந்தித்துச் செல்லலாம்.

**மகிபாலர்** :—மகாராணி! என்ன இது? தீண்ட வந்த பாம்புக்குப் பால் வார்க்கிறீர்கள்? கொட்ட வந்த தேளுக்குக் கருணை காட்டுகிறீர்கள்? ஒற்று அறிய வந்த இவனிடம் அன்பு காட்டுவது நம் கண்ணை நாமே குத்திக்கொள்வது போல் ஆகும், மகாராணி!

**புவனேஸ்வரி** :—அமைச்சரே! நான் சொன்னதைச் செய்யுங்கள். பூபதி இந்த அரண்மனையில் எந்தக் குறையும் இல்லாமல் சுகமாக இருக்க வேண்டும். ...ம்... இன்னொன்று! பூபதி எந்த நேரத்தில் என்னைச் சந்திக்க விரும்பினாலும் தடையில்லாமல் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

**மகிபாலர்** :—(அடக்கத்துடன்) தங்கள் விருப்பம், மகாராணி! (பூபதியைப் பார்த்து) வா, பூபதி போகலாம்.

[செல்கின்றனர்.]

— திரை —

## காட்சி 4

**காலம்** :—நடுச்சாமம்

**இடம்** :—முல்லைநாட்டு அரண்மனையை அடுத்த பூங்காவில் பளிங்கு மண்டபம்.

**இருப்போர்** :—பூபதி.

[தவளைகளின் இரைச்சல், ஆந்தையின் அலறல், சுவர்க் கோழியின் மெல்லிய சத்தம் முதலியன அது நள்ளிரவு நேரம் என்பதைப் பயங்கரமாக உணர்த்துகின்றன. அரண்மனைக் காவலன் 'டங்...டங்' என்று இரண்டு மணி அடித்து அது நடுச்சாமம் என்பதை நினைவுறுத்துகிறான். பூபதி, தூக்கமின்மையால் சிந்தனையுடன் அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருக்கிறான்.]

**ஒரு குரல்** :—பூபதி...!

**பூபதி** :—(திடுக்கிட்டு) யார்? யார் என்னை அழைத்தது?

**குரல்** :—நான்தான்...!

**பூபதி** :—நான்தான் என்றால்...? நீ எங்கிருந்து பேசுகிறாய்?

**குரல்** :—உன் இதயத்திலிருந்து...?

**பூபதி** :—யார், நீ...?

**குரல்** :—இத்தனை நாள் உன்னால் புதைத்துவைக்கப்பட்டிருந்த உன் மனசாட்சி!

**பூபதி** :—(வெறுப்புடன்) மனசாட்சி! நீ ஏன் இப்போது என் இலட்சியத்திற்குக் குறுக்கே வந்தாய்?

**குரல்** :—உன்னை நல்வழிப்படுத்த......! உன்னை நல்லவனாகத் திருத்த...!

**பூபதி** :—நான் பெருஞ்செல்வம் திரட்டிக் குபேரனைப்போல வாழ ஆசைப்படுகிறேன். மனசாட்சி இல்லாதவர்களால்தான் இன்றைய உலகத்தில் சீக்கிரம் செல்வம் சேர்க்க முடிகிறது. ஆகவே, நீ தயவு செய்து என்னைவிட்டுப் போய் விடு! சீக்கிரம் போய்விடு.

**குரல்** :—நீ செல்வந்தனாக மாறினாலும் சரி. ஏழையாக இருந்தாலும் சரி. நான் உன்னை விட்டுப் போக மாட்டேன். அப்படிப் போவதாக இருந்தால் உன்னை வாட்டி வதைத்து சித்திரவதை செய்து கொன்றுவிட்டுத்தான் போவேன். உன் உயிரையும் என்னுடன் எடுத்துக் கொண்டுதான் போவேன்.

**பூபதி** :—(அதட்டலுடன்) ம்...ம்...! நீ என்ன எனக்குப் பயம் காட்டுகிறாயா...?

**குரல்** :—பயம் காட்டவில்லை. பகுத்தறிவு இல்லாதவனே! உன் சூழ்நிலையை நன்றாகச் சிந்தித்துப் பார். 'செல்வம்...செல்வம்...' என்று பேராசை பிடித்து அலைந்து கொடிய செயல்களில் ஈடுபட்டு, குற்றம் பல புரிந்துகொண்டிருக்கிறாயே! எல்லாம் அறிந்தவனாகக் காட்டிக்கொள்ளும் உன் அறியாமை எங்கே? நீ மாற்றானுடைய கையாள் என்பது தெரிந்தும் உனக்குப் புகலிடம் கொடுத்த அரசி புவனேஸ்வரியின் சீரிய பண்பு எங்கே? உளவு அறிய வந்த உனக்குப் பால், பழம், பல்வகை உணவுகள் அத்தனையும் கொடுத்து அவை போதாதென்று பாதுகாப்பும் அளித்திருக்கும் அந்த நல்ல உள்ளம் படைத்தவ

னுக்கு விரோதமாக ஒற்றுவேலை பார்க்கத் துணிந்த நீ நாயினும் கேடானவன்; நன்றிகெட்ட நாயினும் கேடானவன்!

**பூபதி** :—உண்மை! இதை நான் ஒப்புக்கொள்வதைவிட வேறு வழியில்லை.

**குரல்** :—வெளியில் பேசும்போது மார் தட்டிக் கொள்ளலாம். ஆனால், ஒவ்வொருவனும் தனிமையில் இருக்கும்போது மனசாட்சிக்குப் பயந்து பதில் சொல்லியே ஆகவேண்டும்.

**பூபதி** :—உண்மை. முக்காலும் உண்மை! அந்தப் பயம் இருப்பதால்தான் பசியிருந்தும் பாலையும் பழத்தையும் தொட்டுப் பார்க்கக்கூட என் கை கூசுகிறது.

**குரல்** :—இந்த நாட்டு அரசியின் கையில் இப்போது உன் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும், பிறராலும் உனக்குத் தீங்கு நேரக்கூடாது என்று உனக்குச் சிறந்த பாதுகாப்பு அளித்துள்ள அரசிக்கு நீ என்ன கைமமாறு செய்யப் போகிறாய்?

**பூபதி** :—(பேசாமல் இருக்கிறான்.)

**குரல்** :—ஏன் ஊமையாகிவிட்டாய்? இந்த நாட்டுக் கருவூலத்தைப் பற்றியும், படை நிலைமை பற்றியும் வேவு பார்த்துக்கொண்டு போய் உன் அரசனுக்கு நீ சொல்வாயே—(ஏளனமாக) அது கைம்மாறு இல்லையா?

**பூபதி** :—(உணர்ச்சியுடன்) இல்லை. இல்லவே இல்லை! நான் அப்படிச் சொல்லக்கூடாது. ஆமாம். நான் அப்படிச் சொல்லவே கூடாது. நான் பகைவனின் ஒற்றன் என்று தெரிந்து கொண்டும் எனக்குத் தண்டனை விதிக்காமல், என் உயிரைக் குடிக்காமல் இன்னும் விட்டு வைத்திருக்கும் இந்த நாட்டு அரசிக்கு நான் துரோகம் இழைக்கவே மாட்டேன்.

**குரல்** :—இனிமேல் துரோகம் இழைக்காமல் இருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இதுவரை இழைத்துவந்த தீமைக்கு நீ என்ன பிராயச்சித்தம் செய்துகொள்ளப் போகிறாய்?

**பூபதி** :—(குழப்பத்துடன்) ஆம். அதற்கு நான் என்ன செய்வது? அய்யோ! எனக்கு ஒன்றும் புரியவில்லையே? எனக்கு ஒரு வழியும் தெரியவில்லையே?

**குரல்** :—நான் சொல்கிறேன். இப்போதே மகாராணியிடம் ஓடு ஓடு, அவர்களுடைய பாத கமலங்களை உன் கண்ணீரால் கழுவு.

உண்மையைக் கூறி அவர்களுடைய அன்பான மன்னிப்பைக் கேள். அல்லது, அவர்களிடம் நீயே கடுமையான தண்டனை ஒன்றைக் கேட்டு அநுபவி. அதுதான் உன் செயலுக்குச் சிறந்த வெகுமதியாகும்.

**பூபதி** :—ஆம்... இப்போதே போகிறேன். எனக்குப் பெருஞ் செல்வம் வேண்டாம்; பெரிய பெரிய பதவிகள் வேண்டாம். நான் மனிதத்தன்மையுள்ள மனிதனாக வாழ்ந்தால் அதுவே எனக்குப் போதும். ஆதரவு அற்று சிக்கிக்கொண்ட என்னைக் கொல்லாமல் படுக்கப் பஞ்சணையும், பசிக்குப் பாலுணவும், தைரியமுடன் இருக்கப் பாதுகாப்பும் கொடுத்து என்னை ஆதரித்த அரசியின் கால் தூசுக்குச் சமமானவன், நான். பகைவருக்கும் அருள்புரியும் பண்புள்ள அவர்களுடைய பாதங்களில் விழுந்து நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தெய்வத்தின் குழந்தையைக் கொன்றவன் நான்தான் என்றும் கூறி எனக்கு மரண தண்டனை விதிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

**குரல்** :—அதுதான் நல்லது! மனிதருக்கு நிழல் உண்டு. உடல் அழிந்தால் அந்த நிழலும் அழிந்துவிடும். ஆனால், பாவத்திற்கு ஓர் நிழல் உண்டு. அந்த நிழல், ஆத்மா இந்த உலகில் இருக்கும் வரைக்கும் அதைத் தொடர்ந்து கொண்டே இருக்கும். செய்த பாவத்திற்குக் கழுவாய் தேடிக்கொள்ளும்வரை பாவத்தின் நிழல் நம் ஆத்மாவைத் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

**பூபதி** :—வேண்டாம்! அந்த நிழல் என் ஆத்மாவைத் தொடர்ந்து நான் இறந்துவிட்ட பிறகுகூட என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருக்க வேண்டாம். இப்போதே மகாராணியிடம் சென்று உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவர்களிடம் கடுமையான தண்டனையும் பெற்றுக்கொள்கிறேன். அப்போதுதான் என் மனப்புயல் ஓயும்; என் உள்ளம் அமைதியடையும். மகாராணி...! ம...கா...ரா...ணி!

[கத்திக்கொண்டே ஓடுகிறான்.]

**திரை —**

(தொடரும்.)

# பாடப் புத்தக வெளியீடு : அரசினர் உடைமையாக்கக்கூடாது

## அசெம்பிளி மதிப்பீட்டுக் குழு சிபார்சு

### ஆதாரக் கல்வியைப் பரப்புவதை நிறுத்தி வைக்க யோசனை

சென்னைச் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கையை அதன் தலைவர் திரு. சி. ஆர். ராமசாமி அண்மையில் அசெம்பிளியில் சமர்ப்பித்தார். பள்ளிப் பாட புத்தகங்கள் பிரசுரத்தைத் அரசாங்க உடைமையாக்குவது விரும்பத்தக்கதல்ல ; ஆதாரக் கல்விப் பிரச்னை பூராவும் மறுபரிசீலனை நடத்தப்படும் வரை பள்ளிகளை மேற்கொண்டு ஆதாரக் கல்வி முறைக்கு மாற்றலாகாது ; ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகிய மூன்று துறைகளுக்கும் தனித்தனி கல்வி டைரக்டர்களை ஏற்படுத்திக் கல்வி இலாகாவை சீரமைக்க வேண்டும்; என்ற முக்கியமான சிபார்சுகள் கமிட்டி அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆதாரக் கல்வியின் நோக்கங்கள் ஏட்டளவில் சிறந்தவையாக இருந்த போதிலும், ஏற்கனவே காணப்பட்ட அனேக சங்கடங்கள் காரணமாக நடைமுறையில் நிறைவேற்றக் கூடியதாக அவை இல்லை என்று சென்னை அசெம்பிளி மதிப்பீடு கமிட்டி அறிக்கையொன்றில் கூறியுள்ளது. அறிக்கை அண்மையில் அசெம்பிளியில் சமர்ப்பிக்கப்பட்டது. இருவித கல்வி முறைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, ஸ்தலத்தில் உள்ள கைத்தொழில்களில் பயிற்சி, பிரஜா உரிமைப் பயிற்சி ஆகியவற்றை இணைத்து வழக்கமாக இருந்து வரும் கல்வி முறையே தக்கவாறு மாற்றி அமைக்க வேண்டும் என்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. இதனை ஏற்பதன் மூலம் தற்போதுள்ள கல்வி வசதிகளுக்கு அதிகப்பணமும் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளது. ஆதாரக் கல்வித்திட்டத்தை சகல அம்சங்களிலும் பூர்ணமாக ஆராய்ந்த பின்னரே மேற்கொண்டு ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் எனக் கமிட்டி கூறியது,

#### பாடப் புத்தகங்கள்

பாடப்புத்தகங்களை சர்க்கார் உடைமையாக்குவதற்கும்கமிட்டி ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. இந் நடவடிக்கை சிந்தனைக் கட்டுப்பாட்டுக்கு வழி வகுக்கும் எனவும், கல்வியின் நோக்கத்துக்கே பாதகத்தை ஏற்படுத்தும் என்றும் கமிட்டி கூறியது.

பாடப்புத்தகங்களை எழுதத் தகுதி வாய்ந்தவர்களை சர்க்கார்

நியமிக்கலாம் என்றும், தனியார் வெளியிடும் பாடப்புத்தகங்களுக்குப்போட்டியாக இவையும் இருக்கும் என்றும் சர்க்கார் வெளியிடும் பாடப் புத்தகங்களையும் தனியார் வெளியிடும் பாடப் புத்தகங்களையும் செல்வாக்குக்கு உட்படாத தகுதி வாய்ந்த தேர்வு கமிட்டிகள் பரிசீலித்துப் பொறுக்க வேண்டும் எனத் தெளிவாக அறிவிக்கப் பட வேண்டும் என்றும் கமிட்டி யோசனை தெரிவித்தது.

பாடப் புத்தகங்களாக இல்லாத ஆராய்ச்சித் துறை, இதர பயனுள்ள புத்தக வெளியீட்டுக்கு சர்க்கார் மான்ய உதவி அளிக்க வேண்டும் என்றும் கமிட்டி கூறியது.

## சீரமைப்பு

நிர்வாகத்தை அதிக அளவு பரவலாக்கி, கல்வி இலாகாவைப் பூரணமாகச் சீரமைக்க வேண்டும் என்றும் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. பிரைமரி அல்லது ஆரம்பக் கல்வி சம்பந்தமாக, அதாவது முதல் வகுப்பிலிருந்து ஏழாவது வகுப்பு வரை (ஏழாவது வகுப்பு உட்பட) விவகாரங்களைக் கவனிக்க தனி டைரக்டர் ஒருவரும், செகண்டரி கல்வி சம்பந்தமாக அதாவது 8-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரை உள்ள விவகாரங்களைக் கவனித்துக் கொள்ள மற்றொரு டைரக்டரும், சர்வகலாசாலைக் கல்வி, சர்க்கார் கல்லூரிகள் ஆகியவை சம்பந்தமாக ஒரு தனி டைரக்டரும் இருக்க வேண்டும் என்று கமிட்டி யோசனை தெரிவித்துள்ளது.

பிரைமரி, செகண்டரி கல்வி டைரக்டர்களுக்கு ஆலோசனை கூற இரு போர்டுகளிருக்க வேண்டும். அதிகாரிகள், அனுபவமுள்ள ஆசிரியர்கள், கல்வி நிபுணர்கள் உட்பட மொத்தம் 18 பேர்களுக்கு அதிகப்படாமல் போர்டில் இருக்க வேண்டுமெனக் கமிட்டி குறிப்பிட்டது.

## தனியாருக்கு ஆதரவு

ஏராளமான பள்ளிகளுக்கு வகை செய்ய வேண்டியிருப்பதை உத்தேசித்து, தனியார் ஸ்தாபனங்களும், மானேஜ்மெண்டுகளும் சாத்யமான அளவு அதிக எண்ணிக்கையில் பள்ளிகளைத் துவக்க ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும், அவைகளுக்கு சர்க்கார் தாராளமாக உதவியளிக்க வேண்டும் என்றும் கமிட்டி தெரிவித்தது.

மிகவும் ஒதுப்புறமாக உள்ள இடங்களில் அல்லது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் காரணமாக அல்லாமல் இனி பொதுப்படையாக ஒற்றை ஆசிரியர் பள்ளிகள் துவக்கப்படலாகாது என்றும் கமிட்டி கருத்து தெரிவித்தது.

பிரைமரி பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் 1:35 க்குமேல் இருக்கலாகாது என்றும் சிபாரிசு செய்தது.

1962-63ல் செகண்டரிப் பள்ளிகளில் 11-வது வகுப்பைத் துவக்குவதுபற்றிக்கூடியசீக்கிரம் சர்க்கார் ஒரு முடிவுக்கு வர வேண்டியதன் அவசியத்தையும் கமிட்டி வலியுறுத்தியிருக்கிறது.

## ஆங்கில போதனை

எல்லா ராஜ்யங்களிலும் 3-வது வகுப்பிலிருந்தே ஆங்கில போதனை புகுத்த வேண்டும் என்று தென் ராஜ்யங்களின் கல்வி மந்திரிகள் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை 1962–63லிருந்தே ராஜ்யத்தில் அமலாக்க வேண்டும் எனக் கமிட்டி வற்புறுத்தியது.

பிராந்திய மொழி பாடப் புத்தகங்களில் பயன் படுத்தப் படும் கலைச் சொற்கள் சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்களாக இருக்க வேண்டும் என்றும், அடைப்புகளில் ஆங்கிலப் பதங்கள் இடம் பெற வேண்டும் என்றும் கமிட்டி தெரிவித்தது. ஆங்கில போதனை மொழியை விரும்புவோரின் நலனுக்காகப் பள்ளிகளில் ஆங்கிலம், தமிழ் போதனை மொழிகள் பிரிவுகள் இரண்டுமே இருக்க வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும், ஆங்கில போதனை மொழியைத் துவக்க விரும்பும் பள்ளிகளின்மீது தற்போது விதிக்கப்பட்டுள்ள நிர்ப்பந்தங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் கமிட்டி வலியுறுத்தியது.

பள்ளிக்கூட நடவடிக்கைகளில் சாரணர் இயக்கம் இடம் பெற வேண்டும் என்றும், இதற்கு அவசியமானால் சர்க்கார் நிதி உதவியளிக்க வேண்டும் என்றும் கமிட்டி கருதுகிறது.

ஹாஸ்டல்களில், இட நெரிசல், பள்ளிக்கூடங்களில் காற்றோட்டமில்லாதது, பள்ளிக் கட்டிடங்கள் இடிந்த நிலை போன்ற குறைபாடுகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கமிட்டி கூறியது.

முதலில் மதுரையிலும், கோவையிலும் பிராந்திய பிலிம் நூல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும், இது விஸ்தரிக்கப்பட வேண்டும் என்றும் இறுதியில் ஒவ்வொரு ஜில்லாவிலும் இத்தகைய நூல் நிலையமொன்று இருக்க வேண்டும் என்றும் கமிட்டி கூறியது.

—'தினமணி'

# பஞ்சாயத்துக்களில் அரசியல் தலையிடக்கூடாது

---

**அண்மையில் சென்னை மாநகரில் நடைபெற்ற மாநிலப் பஞ்சாயத்துகள் மாநாட்டில் திரு. காமராஜர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி :—**

*ரோடு போடுகிறோம் என்றால், ரோடு எதற்கு, எங்கள் வண்டி போகப் போகிறதா? என்று கேட்பார்கள். ஹரிஜன காலனி கட்டுகிறோம் என்றால் சிலருக்குத்தான் கிடைக்கும், மற்றவர்கள் தங்களுக்கு இல்லையே என்பார்கள். ஆக பல்வேறு பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண்டும். இருந்தாலும் எல்லோரையும் கூப்பிட்டு அவர் அவர்களுக்கு என்ன வேண்டும், எபபடியிருக்கிறீர்கள் என்றெல்லாம் விசாரிக்க வேண்டும். உங்களுக்கு சாப்பாட்டிற்கு வசதியிருக்கிறதா, என்ன தொழில் செய்கிறீர்கள், உங்கள் பிள்ளை நன்கு படிக்கிறானா என்றெல்லாம் விசாரிக்க வேண்டும். அப்படி விசாரிக்கும்போது அவர்களுக்கு ஒரு திருப்தி ஏற்படும். நாம் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முயற்சி எடுக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும். இதில், அரசியல் விஷயம், பஞ்சாயத்தில் வரத்தான் வரும். ஆனால், அரசியல் கட்சிகள் பஞ்சாயத்து விஷயங்களில் கலந்து கொள்ளாமல் விலகி நின்றால் நல்லது. ஏற்கனவே தொந்தரவுகள் இருக்கின்றன. அது இங்கும் வரவேண்டுமா? கிராமப் பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட மட்டில் அரசியல் விவகாரங்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். பெரிய விவகாரங்களைப் பற்றிப் பேச சட்டசபை இருக்கிறது. தங்கள் தங்கள் கிராமங்களுக்கு வேண்டியது என்ன என்று பார்த்துச் செய்ய வேண்டும். பஞ்சாயத்துக்கள் சாக்கடையைச் சுத்தம் செய்ய வேண்டுமென்று சொன்னால், நமக்கு வேண்டாதவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்—ஆகவே சாக்கடையைச் சுத்தம் செய்ய வேண்டாம் என்று சொன்னால் சரியா? ஆகவே, தனிப்பட்ட பிரச்சினையாக இல்லாது, பொதுப் பிரச்னையாக இருக்க வேண்டும். கட்சி வித்தியாசத்தை மறந்து விட வேண்டும். நமக்கு வோட்டு போட்டவன், நமக்கு வேண்டியவன், வேண்டாதவன் என்றெல்லாம் நினைக்கக்கூடாது. சண்டை போட்டுக் கொண்டிருந்தால் உங்கள் பேரில் மரியாதை இருக்குமா? சில ஊர்களில் ஒற்றுமையாக இருந்து லட்சக் கணக்கில் செலவு செய்து பள்ளிக்கூடங்கள், கிணறுகள், வைத்திய வசதிகள் போன்றவைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சில ஊர்களில் ஒன்றுமே நடக்காது. அப்படி ஒன்றுமே நடக்காததற்குக் காரணம் ஊரில் உள்ள சண்டை தான். ஒரு பள்ளிக்கூடம் வைக்க வேண்டுமென்றால், இங்கே*

வைக்க வேண்டு மென்பார்கள் ஒரு சிலர். வேறு ஒரு இடத்தில் வைக்க வேண்டுமென்பார்கள் வேறு சிலர். அங்கு வைத்தால் 6 பர்லாங்கு நடக்க வேண்டியிருக்கிறது என்பார் ஒரு சிலர். ஆக, இப்படியே சொல்லிக் கொண்டு ஒன்றுமே நடக்காமல் இருக்கும். உள்ளுக்குள் சண்டை போட்டுக் கொண்டால் இந்தக் கிராமத்திற்கு வேண்டாம் என்று நினைத்து அந்தப் பள்ளிக்கூடத்திற்குண்டான செலவை வேறு ஒரு கிராமத்தில் செலவழித்து விடுவார்கள். கோபம் வரலாம், ஆத்திரம் வரலாம். வராது என்று சொல்லவில்லை. உணர்ச்சி இல்லாவிட்டால் அது மரக்கட்டைதான். கூடுமான வரையில் சண்டை காரணமாக ஊர் கெட்டுப்போக இடம் கொடுக்கக்கூடாது. பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், தகராறு இல்லாமலிருந்தால் கிராமத்திற்குத்தான் நல்லது. எல்லாவற்றையும் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ள வேண்டும். எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் அதைத் தாங்கும் சக்தி பெண்களுக்கு இயற்கையிலேயே இருக்கிறது. அப்படி நம்மால் இருக்க முடியுமா? கோபம் வந்தால் அடித்து விடுகிறோம், அல்லது எங்கேயாவது போய்விடுகிறோம். பஞ்சாயத்தை அவர்களிடம் கொடுத்தால் நன்றாயிருக்கும். அவர்கள் தகராறு இன்றி நடத்துவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அப்படி அவர்களிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு அவர்களை விரட்டாமல் இருக்க வேண்டும். ஒற்றுமையாக இருக்க வேண்டும். நமக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருக்க வேண்டும். பெரியவர்கள்தான் விட்டுக் கொடுக்கவேண்டும். நம் பேரில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் நாம் எதைச் சொன்னாலும் கேட்பார்கள். மகாத்மாவிற்கு மக்களின் எண்ணத்தை அறியும் சக்தி இருந்தது. மக்களின் எண்ணத்தை உணர்ந்து காரியங்களை நடத்தியதால் ஒரு பெரிய சக்தியை அவர்களால் திரட்ட முடிந்தது. ஜாதிச் சண்டை, மதச் சண்டை என்று பல இருந்தன. அவைகளை யெல்லாம் மறந்து கட்டுப்பட்டிருந்ததற்குக் காரணம் என்ன? மக்களுக்கு அவரிடமிருந்த நம்பிக்கைதான் அதற்குக் காரணம்.

**(கிராம நலம் நவம்பர் 1961)**

---

வாழ்க்கை என்னும் இன்னிசை இரண்டு கம்பிகளின் இனிய அசைவுகளால் உருவாகிறது. ஒரு கம்பியின் பெயர் தொண்டு. மற்றொன்றின் பெயர் அன்பு. தொண்டு உலகத்தைக் களிக்கச் செய்கிறது. அன்பு, உள்ளத்தைக் களிக்கச் செய்கிறது.

—காண்டேகர்.

# பணித்துறை—மாவட்டக் கழகங்கள் உயர்நிலைக் கல்விப் பகுதி

## 2-10-61க்குப் பிறகு தொடர்ந்து இருத்தல்

[Establishment-District Boards-Secondary Education Section-Continuance after 2-10-61—Orders Passed.]

1961-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-ந் தேதியிலிருந்து மாவட்டக் கழகங்களினால் (District Boards) நிர்வகிக்கப்பட்டு வந்த எல்லா உயர் நிலைப்பள்ளிகளும் அவைகளுடைய வரவுகளையும், கடன்களையும் சேர்த்து, மாவட்டக் கலெக்டரிடம் மாற்றப்பட்டு, அவர் வசம் ஒப்படைக்கப் படவேண்டும் என்று கிராம நல, தலநிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர்மீ 26-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 2611-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மாவட்டக் கழகக் கல்வி அதிகாரியின் பணியையும் மாவட்டக்கழக அலுவலகத்தில் உயர்நிலைக் கல்விப் பிரிவுப் பகுதிகளில் பணியாற்று இற சிப்பந்திகளின் பணியையும், மறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரையில், மாவட்டக் கலெக்டரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அந்த ஆணையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டக் கழகக் கல்வி அதிகாரி, மாவட்டக் கலெக்டரின் தனி உதவியாளரின் (தல நிர்வாகம்) நேரடி அதிகாரத்தின் கீழ்ப் பணியாற்றுவார் உத்திரவிடப்பட்டுள்ளது.

2. மாவட்டக் கழகங்களின் பொதுப் பகுதியினரால் உயர் நிலைக் கல்விப் பிரிவு சம்பந்தப்பட்ட இதுகாறும் செய்யப்பட்டு வந்த வேலைகள் மிகவும் பெருவாரியாகவும், அதிகமாகவும் இருப்பதை முன்னிட்டும், உயர்நிலைக் கல்விப் பிரிவினராலேயே இனிமேல் செய்யப்படவேண்டிய அதிகமான வேலைகளை முன்னிட்டும், 1961-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-ந் தேதியில் மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்ட பிறகு, உயர் நிலைக் கல்வி சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க என்று அதிகப்படியான பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

3. 1961-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-ந் தேதியிலிருந்து, உயர் நிலைக் கல்விப் பிரிவைத் தொடர்ந்து நடத்துவது பற்றி, அரசாங்கம் கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது:—ஒவ்வொரு உயர்நிலைக் கல்வி அலுவலகத்திற்கும் 100 ஆசிரியர்களுக்கு ஒரு லோயர் டிவிஷன் குமாஸ்தாவும், ஆசிரியர்களின் எண்ணிக்கை 100-க்கு மேல் இருந்து அந்த அதிகப்படியான எண்ணிக்கை 60-க்கு குறையாமலும் இருந்தால், அதிகப்படியாக இன்னொரு லோயர் டிவிஷன்

குமாஸ்தாவும் இருக்கலாம். அத்துடன், உயர்நிலைக் கல்விப் பிரிவுக்குக் கீழ்க்கண்ட முறையில் சிப்பந்திகள் நியமனம் செய்துகொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது :—

மேற் பார்வையாளர்—இரண்டு.
லோயர் டிவிஷன் குமஸ்தாக்கள்—நான்கு.
தட்டெழுத்தாளர் — ஒன்று.
உடன் ஆட்கள்—இரண்டு.
பணியாட்கள்—நான்கு.

உயர்நிலைக் கல்விப் பிரிவுச் சிப்பந்திகளுக்கான சம்பளமும், படியும், 1961-ம் ஆண்டு செப்டம்பர் 26-ந் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறை அரசாங்க ஆணை எண் 2611-ல் உத்தரவிடப்பட்டுள்ளபடி, உயர்நிலைக் கல்வி நிதியிலிருந்து சமாளிக்கப்பட வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 30-9-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2689-ன் சுருக்கம்.)

(கிராம நலம் நவம்பர் 1961)

---

# 'சுக்கிரனுக்குச் செல்ல விரும்புகிறேன்'

## யூரி காகரின் விருப்பம்

"கடவுள் நம்பிக்கை எனக்கில்லை என்பதற்காக, நம்பிக்கை உள்ளவர்களை நான் அவமதிக்க மாட்டேன்; வானவெளியில் இருக்கும் கடவுளை நான் காணவில்லை! மனித இனத்திற்குப் பயன் விளைவிக்கக்கூடிய செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட தத்துவமாகும்."

என்று, ரஷ்யாவின் முதலாவது வானவெளி வீரர் யூரி காகரின், டில்லியில் செய்தியாளர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"சுக்கிரனுக்குப் போகவேண்டும் என நான் விரும்புகிறேன்; ஏனென்றால் சுக்கிரன் மர்மங்கள் நிறைந்த கிரகமாகும். சுக்கிரன் கிரகம் இதுவரை விஞ்ஞானிகளுக்கே புதிராக இருந்து வருகிறது. மேகங்களுக்குப் பின்னால் என்ன மறைந்திருக்கிறது என்பதைக் காண்பதால் மகிழ்வு ஏற்படும்" எனவும் காகரின் தெரிவித்தார்.

"சந்திர மண்டலத்திற்குச் செல்லும் முதலாவது வீரராக இருக்க வேண்டும் என விரும்புகிறீர்களா?" என ஒரு செய்தியாளர் கேட்டார்.

'யார் முதலில் சந்திரனுக்குச் செல்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலையில்லை. மனிதன் சந்திரனில் இறங்கவேண்டும் என்பது முக்கியமாகும்." என அவர் தெரிவித்தார். (நம் நாடு)

**************************************

# உணவுப் பழக்கங்களும் ஆரோக்கியமும்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**************************************

உண்பது ஒரு கலையாம். உணவைப் பாகஞ் செய்வதும் கலையாகும். உணவு உயிரைத்தோற்றுவிக்கிறது; தோன்றிய உயிரைக் காக்கிறது. ஒவ்வொரு பிராணிக்கும் தக்க உணவு தனிப்பட்டிருக்கிறது. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லாப் பிராணிகளுக்கும் ஒரே மாதிரி உணவு பொதுவாக இருந்த போதிலும், இந்த வகுப்பிலுள்ள தனித்தனிப் பிராணிகட்கிடையே உணவு உண்பதில் வேற்றுமை காணலாம்.

மனிதர்களுக்கிடையே இத்தகைய வித்தியாசங்களை எவ்வளவோ காண்கிறோம். மதக் கொள்கை, அந்தந்தப் பிரதேசங்களில் கிடைக்கும் உணவு வகை, பாரம்பரைப் பழக்கங்கள், புதிய நாகரிகத் தொடர்பு போன்றவை உணவைப் பாகஞ் செய்வது, உணவு வகைகளைத் தயாரிப்பது, உண்ணும் முறை ஆகியவற்றில் வித்தியாசங்களை எழுப்பக் காரணமாகின்றன.

பண்டைக் காலத்தில் எல்லாம் சுபிக்ஷமாயிருந்ததாம்; மனிதர்கள் இக்காலத்தில் இருப்பவர்களைக் காட்டிலும் அதிக ஆரோக்கியமுடையவர்களாயிருந்தார்களாம்; தேனும் பாலும் செழித்து ஆறாக ஓடியதாம்; மக்கள் நூறு வயதுக்கு மேலிருந்தார்களாம்; திடகாத்திரமுடையவர்களாயிருந்தனராம்; சத்தியம் விளங்கியிருந்ததாம். இதன் உண்மையை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த அபிப்பிராயங்களுக்கு ஆதாரமில்லை என்று விளங்கும். ஆங்காங்கு சில ஊர்களில் உணவுச் செழிப்பு இருந்திருக்கலாம். ஆனால் வேறு ஊர்களில் பஞ்சம் நிலவி, மக்கள் ஆரோக்கியம் குலைந்து, துயரடைந்ததும் உண்டு. பண்டைக் காலத்தில் நூறு வயது ஆரோக்கியமாக இருந்தவர்களும் உண்டு. திடகாத்திரர்களாய் கடுமையான தேக உழைப்பு செய்து வந்தவர்களும் உண்டு அதோடு வியாதிகளால் பீடிக்கப்பெற்று வருந்தியவர்களும் உண்டு. இக்காலத்துப் போக்கு வரத்து வசதி அக்காலத்தில் இல்லாததால், சில இடங்களில் உணவு வகை குவிந்திருக்கும். இங்கு மக்கள் முழு ஆரோக்கியம் பெற்றவர்களாயிருக்கலாம். இவர்கள் தேக உழைப்பினாலும் ஆரோக்கியத்தைக் காத்து வந்தார்கள். வேறு ஊர்களில் உணவுப் பற்றாக்குறை எப்பொழுதும் இருந்ததால், நோய்களுக்கு இரையாய் வருந்தி இறந்தவர்கள் போக, மிகுதியுள்ளவர்கள் ஈரமில்லாக் காடு

களில் உலர்ந்து காணும் முட்செடி போல், உருவமுடைய மனிதர்களாக உயிர் காத்திருப்பார்கள். சரித்திர வரலாறு இவ்வுண்மைகளை விளக்குகிறது.

ஒரு காலத்தில் இங்கிலாந்தில் வழங்கி வந்த நாகரிகத்தின்படி உயர்தரப் பகுதி மக்கள் மாமிசத்தை ஏராளமாக உண்டு, தாட்டியான உடலுருவம் பெற்றவர்களாயிருந்தனர் என்று சரித்திர வரலாற்றிலும், கதைகளிலும் சொல்லப்படுகிறது. இத்தகைய ஊட்டுப் பழக்கமும் தாட்டியான உருவத் தோற்றமும் பிற்கால நாகரிகத்திற்குத் தகுதியாகாமற் போயின. சென்ற இரண்டு உலக மகா யுத்த அனுபவத்தின் பயனாக உணவுச் சிக்கனம் ஏற்பட்டு, உணவின் குணங்களில் கருத்துச் செலுத்தப்பெற்றது. போஷாக்கு ஆராய்ச்சி நடைபெற்று, நல்ல போஷாக்குக்கு இன்றியமையாத பொருள்கள் கண்டுபிடிக்கப்பெற்றன. வைட்டமின்களுக்கும், சில உப்புக்களுக்கும் முக்கியத்துவம் உண்டாயிற்று. இந்த மாறுபாடுகளால் மக்களுடைய உருவத் தோற்றம் மாறியது. ஆனால் ஆரோக்கியம் முன்னிலும் உயர் நிலையையே அடைந்தது. ஒரு சிலர் வெகு ஆரோக்கியமாகவும், வேறு சிலர் ஆரோக்கியம் குன்றியவர்களாயும் இருந்ததுபோக, பொதுவாகவே மக்கள் நிரந்தர ஆரோக்கியம்பெற்றவர்களாகவே ஆகிவிட்டனர். இதற்கு முக்கிய காரணங்கள் இந்தப் போஷாக்கு ஆராய்ச்சிகள் மட்டுமல்ல, உணவு வகைகளுக்குப் போக்கு வரத்து வசதி அதிகமாகி, உணவுவகை செழித்த ஊர்களிலிருந்து பற்றாக்குறையுள்ள ஊர்களுக்கு அனுப்ப இயன்றதுமாகும்.

இன்று உலகில் போக்குவரத்து வசதி அதிகமாயிருந்து உலக மக்களுக்கு அதிகத் தொடர்புஏற்படுவதால், உலக நாடுகளுடைய பொது சுகநிலையில் கருத்துச் செலுத்தப்படுகிறது. பின்தங்கிய நாடுகளுடைய உணவுப் பற்றாக்குறையை நீக்கவும், அம் மக்களுடைய போஷாக்கு நிலையைச் சீராக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதற்காக உணவு வகை மிகுதியுள்ள நாடுகளிலிருந்து பற்றாக்குறையுள்ள நாடுகளுக்கு விரைவில் உணவு வகை அனுப்பப்படுவதோடு போஷாக்கு விஷயமாகவும், சுகாதார விஷயமாகவும் கண்டுபிடிக்கப்பெற்ற ஆராய்ச்சி உண்மைகளும் விரைவில் எல்லா நாடுகளுக்கும் பரப்பப்படுகின்றன. இதனால் பொதுவில் உலக நாடுகளில் மக்கள் ஆரோக்கியமுள்ளவர்களாகின்றனர்.

இதனால் உலக மக்கள் ஒரே மாதிரி உணவுவகைகளைப்பெற்று ஒரேமாதிரி உண்ணும் முறைகளையும் பெற்றுவிடுவார்கள் என்று எண்ணலாகாது. உண்ணும் முறையும் உணவு வகைகளைத் தயாரிப்பதிலும் மாறுபாடுகள் இருந்தே தீரும். தாவர உணவை மட்டும் உணவாக்கிக் கொள்வதை இந்தியாவில் பெரும்

பகுதி மக்கள் கையாண்டு வரு கின்றனர். இந்தப் பழக்கத்தை அவர்கள் எளிதில் மாற்றிக்கொள் வார்கள் என்று நம்ப முடியாது. தென்னிந்திய மக்கள் உணவு தயாரிப்பில் விரிவான முறை களைக் கையாளுவதுபோல், வேறு இந்தியப் பகுதிகளில் கை யாளுவதில்லை. அரிசியைச் சமைத்து அதோடு சேர்க்கும் பதார்த்தங்களாலே பல வித சித் ரான்னங்களாகின்றன. ஒரு வகையில் பருப்புக்களையும் தேங் காயையும் வறுத்துச் சேர்ப்பார் கள். மற்றொருவகையில் வறுத்த எள்ளு சேர்க்கப்படும். ஒரு வகை யில் புளியும் கடலைப்பருப்பும். இப்படியே பல வகை அன்னங் களைச் செய்துவிடுவார்கள், அரிசி யோடு உளுந்து சேர்த்து இட் டிலி, தோசை முதலியவற்றைச் செய்வார்கள்.

கறிகாய்களை நறுக்கிக் கறி களைச் செய்வதில் எத்தனையோ விதம். பருப்பு வகைகளைக் கறி காய்களோடு சேர்த்துக் கறி செய்து, அரிசிச் சோற்றை ருசிக் கச் செய்கிறோம். இவற்றிலும் பருப்புக்களையும் தேங்காயையும், மிளகாயையும் சேர்க்கிறோம். வெள்ளரிக்காய், புதினா போன்ற வைகளைப் பச்சையாகவே உப யோகிக்கிறோம்.

உணவுகளைப் பாகஞ் செய்வ தில் கருத்துச் செலுத்துவதைப் போல், உணவை ஊட்டிக்கொள் வதிலும் சில விதிகளை அனுச ரித்து வருகிறோம். பெரும்பா லோர் தனியாகச் சாப்பிடுவ தில்லை. பலர் சேர்ந்து சாப்பிடுவ தில் உற்சாகம் ஏற்படுகிறது. உற்சாகம் உணவு ஜீரணிக்க மருந்து போலாகும். துயரமோ கோபமோ, வந்துவிட்டால், உண வில் விருப்பம் குறையும். உமிழ் நீர் கூடச் சுரக்காமற் போகும். இரைப்பையிலும் சுரப்பு குறை யக் கூடும். எந்த மதத்தாராயி ருந்தாலும் சரி. கடவுளை வணங்கி விட்டே உணவு அருந்துவர். உள்ளம் அமைதியடையும். ஜீரண சக்தியும் தக்க நிலையில் இருக் கும்.

உணவு நன்றாக ஜீரணித்து உடம்பில் சேர வேண்டுமானால், பசி என்பது இருக்க வேண்டும். ஆனால் அது அதீதப் பசியாய் முடிந்துவிடக் கூடாது. சிறு குழந்தைகள் பசிதாங்கா. ஆகவே அவர்களுக்குப் பசி முற்றிய பிறகு பசியால் அழுது கொண் டிருக்கும் போது, ஊட்டுவ தனால், உணவு முழுப் போஷாக்கு பயன் அளிக்காது. பசி தீவிரமாகும் முன்னேயே அறிவுள்ள தாய் பிள்ளைக்கு உணவு ஊட்டுவாள்.

குழந்தை விரும்பும் பண்டத் தைத் தின்ன முயலும் போது, தடை செய்தால், அதுவே வேண் டுமென்று முரண்டு பண்ணும்; அல்லது பிற்காலத்தில் அந்தப் பண்டம் வேண்டாமென்று தள் ளிவிடக் கூடும். அந்தப் பண் டத்தில் இன்றியமையாத வைட் டமின் இருக்குமாயின், வைட் டமின் குறைகள் இதனால் ஏற் படக்கூடும். குழந்தைக்கு அன்

னம் ஊட்டும்போது, சில பண்டங்கள் "உடலுக்கு நல்லது" என்று தாய் வற்புறுத்தி ஊட்டக் கூடும். இதனால் அதே பண்டத்தைக் குழந்தை வெகுகாலம் வெறுக்கக்கூடும். இப்படியும் போஷாக்குக் குறை ஏற்படலாம்.

மேனியழகு, ஆரோக்கியம், ஆகிருதி இவைகட்கு ஆதாரம் குடும்ப ஆற்றல் ஒரு புறமிருக்க, உண்ணும் உணவு வகைகளும் ஆதாரமாயிருக்கக் கூடும். சில உணவுகளைச் சிலர் அதிகமாக உண்ணலாம். இதனால் அதிகப்படி பருமனை அடையலாம். உதாரணமாக, சர்க்கரை, மாவுப் பொருள்களை அதிகம் சாப்பிடுவதால், உடலில் அவை நிணமாக மாறி, உடலைப் பூசினாற் போல் ஆக்கிவிடும்.

பெண்களும், குழந்தைகளும் சாதாரணமாக சர்க்கரை மாவுப் பொருள்களை அதிகமாக உண்பார்கள். இவர்களுடைய உணவில் பாலும் அதிகமாகச் சேரும். இவர்களுடைய சருமத்தினடியில் நிணம் அதிகமாகச் சேரும். இந்த நிணத்தில் சூரிய கிரணங்களின் உதவியால் டி வைட்டமின் உற்பத்தியாகும். எலும்புகள் இளகி வளைந்து போகாமலிருக்க டி வைட்டமின் எலும்புகட்கு சுண்ணாம்புச் சத்தையும், பாஸ்பரஸ் சத்தையும் தக்க அளவில் அமைத்து வைக்கிறது. கால்சியம் சத்துக்கு இன்றியமையாதது பால் தான்.

சற்று யோசித்துப் பார்த்தால், உணவுப் பழக்கங்கள் பல விதமாக மாறுபட்டிருப்பதையும், மாறுபடுவதையும் காணலாம். இவற்றை விரிவாக எழுத இந்த இடம் போதாது. ஒரு விஷயம் மட்டும் நாம் மறக்கலாகாது. எவ்வித ஊட்டு முறையைக் கையாண்டாலும், உண்ணும் உணவில் இன்றியமையாத சத்துக்கள் அமைந்திருக்க வேண்டும். ஒவ்வொருவருடைய உடலுழைப்புக்குத் தக்கபடி சக்தி கொடுக்கும்படி யாகவும் இருக்க வேண்டும்.

(நல்வழி)

---

சிறந்த புத்தகங்களே! நீங்கள் தான் என் அருமையான நண்பர்கள். என் வாழ்க்கைக்கு வழி காட்டவேண்டிய பொறுப்பு உங்களுடையது. வழிகாட்டிச் செல்லுங்கள். பின்பற்றிவர நான் தயாராக இருக்கிறேன்.

—ஆப்ரகாம் லிங்கன்.

தொழில் எத்தனைக் கீழ்த்தரம் ஆனாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றுமில்லை. சோம்பல் ஒன்றுதான் அவமானம்.

—டால்ஸ்டாய்.

தமிழ்நாடு சட்டசபையில்

# வரவு – செலவு திட்டம் தாக்கல்!

| | |
|---|---|
| வரவு | ரூ. 92 கோடியே 71 லட்சம் |
| செலவு | ரூ. 99 கோடியே 67 லட்சம் |
| பற்றுக்குறை | ரூ. 6 கோடியே 96 லட்சம் |

தமிழ்நாடு அரசாங்கத்தின் 1962-63 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை (பட்ஜெட்டை) அண்மையில் சட்டசபையில் நிதிமந்திரி சி. சுப்பிரமணியம் தாக்கல் செய்தார்.

இது இடைக்கால வரவு-செலவு திட்டம். பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடக்கும் புதிய சட்டசபை கூட்டத்தில், (மே – ஜூன் மாதத்தில்) மற்றொரு வரவு - செலவு திட்டம் தாக்கல் செய்யப்படும்.

தமிழ்நாடு சட்டசபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் தாக்கல் செய்த கடைசி வரவு - செலவு திட்டம் இது.

பொதுத் தேர்தலில் டெல்லி சட்டசபைக்கு மந்திரி சுப்பிரமணியம் போட்டியிடுவது தெரிந்ததே.

## இந்த ஆண்டுக்கு!

நடப்பு ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட விவரத்தை முதலில் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதன்படி வரவு ரூ. 92 கோடியே 71 லட்சம்; செலவு ரூ. 99 கோடியே 67 லட்சம். பற்றுக்குறை ரூ. 6 கோடியே 96 லட்சம்.

இவ்வாறு பற்றுக்குறை ஏற்பட 3 காரணங்களை மந்திரி தெரிவித்தார்.

(1) அரசாங்க சிப்பந்திகளுக்கு அதிக சம்பளம் கொடுத்தது.

(2) குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த டெல்லி சர்க்கார் கொடுத்துவந்த ரூ. 2 கோடியே 50 லட்சத்தை இந்த ஆண்டு முதல் நிறுத்திவிட்டது. (3) பஞ்சாயத்து யூனியன் அமைத்தன் மூலம், படிப்பு–வைத்தியம்–ஆதி தமிழர் முன்னேற்றம் முதலியவற்றுக்கு அதிக செலவு.

## கடன்

மின்சார உற்பத்தி திட்டங்களுக்கு 15 கோடியே 41 லட்சம் ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் 18 கோடியே 20 லட்சம் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பரம்பிக்குளம் திட்டத்திற்கு ரூ. 3 கோடியே 77 லட்சம்

செலவு ஆகும் என்று மதிப்பிடப் பட்டு இருந்தது. இப்பொழுது ரூ. 4 கோடியே 40 லட்சம் செலவு ஆகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தச் செலவை சமாளிக்க அரசாங்கம் ரூ. 10 கோடியும், மின்சார போர்டு ரூ. 4 கோடியே 5 லட்சமும் கடன் திரட்டும். ரூ. 4 கோடியே 50 லட்சம் இருப்புடன் இந்த ஆண்டு கணக்கு முடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## பற்றுக்குறை

அடுத்த ஆண்டில், அரசாங்கத்திற்கு 92 கோடியே 71 லட்சம் வருமானம் கிடைக்கும்.

செலவு ரூ. 99 கோடியே 67 லட்சம் ஆகும்.

ஆகவே, 6 கோடியே 96 லட்சம் ரூபாய் துண்டு விழும்.

## மந்திரி பேச்சு

வரவு-செலவு திட்டத்தைத் தாக்கல் செய்து, மந்திரி சுப்பிரமணியம் பேசுகையில் கூறிய விவரங்கள் வருமாறு :—

(1) வரிகள் மூலம் டெல்லி சர்க்காரின் வருமானம் வளர்ந்து வருகிறது. இந்த வரிகளில் இருந்து தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் பங்கும் உயரவாய்ப்பு உண்டு.

## கடன் திரட்ட

(2) அணைக்கட்டுக்கு ரூ. 7 கோடியும் மின்சார திட்டங்களுக்கு. ரூ. 18 கோடியே 50 லட்சமும் ஒதுக்கப்பட்டு உள்ளன. இதற்காக அரசாங்கம் 10 கோடியே 50 லட்சம் கடன் திரட்டும்.

(3) திருச்சியில் பெரிய (பிராந்திய) என்ஜினியரிங் கல்லூரியை டெல்லி சர்க்கார் அமைக்கும். சேலத்தில் என்ஜினியரிங் கல்லூரி அமைக்கப் படும்.

(4) இராணுவப் பயிற்சிப் பள்ளிக்கூடம் அமைக்கப்படும்.

இதில் படிக்கும், வசதிக் குறைவான பிள்ளைகளுக்கு அதிக அளவில் உதவிப் பணம் கொடுக்கப் படும்.

(5) புதிய வசதிகள் அமைந்த ஆஸ்பத்திரி ஒன்று, குழந்தைகளுக்காகச் சென்னையில் அமைக்கப்படும்.

## படிக்கக்கடன்

(6) என்ஜினியரிங், வைத்தியம், விவசாயம், ஆடு மாடு வைத்தியம் முதலிய கல்லூரிகளில் படிக்கும் ஏழைமாணவர்களுக்கு படிப்புச் செலவுக்கு வட்டியில்லாத கடன் கொடுக்கப்படும். அடுத்த ஆண்டில், அரசாங்கசிப்பந்திகள் (என் ஜி. ஓ. கள்), ஆசிரியர்கள் ஆகியவர்களின் பிள்ளைகளுக்கு இந்தக் கடன் கொடுக்கப்படும். படிப்பு முடிந்து சம்பாதிக்க ஆரம்பித்தபின், கடன் திரும்ப வசூலிக்கப்படும்.

(7) கல்லூரி ஆசிரியர்களுக்கு ஓய்வு கால ஊதியம் (பென்சன்) கொடுக்கப்படும். அகால மரணம் அடையும் ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்யப்படும். போலீசாருக்கும், அரசாங்க சிப்பந்திகளுக்கும், கஷ்ட காலத்தில் உதவி செய்ய நிதி ஒதுக்கப்படும்.

## கிழவர்களுக்கு!

(8) 65 வயதுக்கு மேற்பட்ட அனாதையான எல்லாக் கிழவர்களுக்கும் மாதம் ரூ. 20 உதவிப் பணம் கொடுக்கப்படும். கண் இழந்தோர், கால், கை இல்லாதவர்கள், ஊமைகள் முதலியவர்களுக்கு 60 வயதில் இருந்து இந்த உதவிப் பணம் கொடுக்கப்படும். உதவிப் பணத்தை கலெக்டர்கள் கொடுப்பார்கள். பிச்சைக்காரர்களுக்கு இந்த உதவிப் பணம் கிடையாது.

இவ்வாறு மந்திரி சுப்பிரமணியம் கூறினார்.

---

தீய காற்று வீட்டைவிட்டு வெளியே போக வேண்டுமானால் நல்ல காற்று வீட்டுக்குள் நுழையவேண்டும். அதுபோல் தீய எண்ணங்கள் நம் உள்ளத்தைவிட்டு அகலவேண்டுமானால் தூய கருத்துக்கள் உள்ளே புகுதல் வேண்டும்.

—காந்தியடிகள்.

முதியவர்கள் அடைகிற வெற்றியைவிட இளைஞர்கள் அடைகிற தோல்வியே சிறந்தது. ஏனெனில், வெற்றியோ தோல்வியோ, இளைஞர்களின் ஆர்வத்தாலும் ஆவேசத்தாலும்தான் ஒரு நாடு முன்னேற முடியும். முதியவர்களின் ஆமைவேகச் செயல்களால் அல்ல.

—டிஸ்ரலி.

நாம் யாரையும் அடக்கி ஆளமாட்டோம் அதே நேரத்தில் வேறு யாரும் நம்மை அடக்கி ஆளவும் அனுமதிக்கமாட்டோம்.

—சன் - யாட் - சென்.

வாழைப் பழத்தின் தோலை வழியிலே வீசி எறிந்தால் அதன் மீது கால் வைப்பவரை வழுக்கிவிட்டுவிடும் அதுபோல நாடகத்தைத் தவறான வழியில் பயன்படுத்தினால் அது மக்களைப் பயங்கரமான படுகுழியில் தள்ளிவிடும்.

— அண்ணாதுரை.

செயற்கரிய செயல்களுக்கு இறப்பு என்பதே கிடையாது. ஞாயிறும் திங்களும் எப்படி மீண்டும் மீண்டும் தங்கள் ஒளியைப் புதுப்பித்துக் கொள்கின்றனவோ அப்படித்தான் அந்தச் செயல்களும் அன்றன்றுடம் புது ஒளியைப் பெற்றுத் திகழும்.

—டென்னிசன்.

அவற்றைப் புகாது தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? புழுக்கள் சாதாரணமாகச் சிறுகுடலில் வாசம் செய்கின்றன. அவற்றின் முட்டைகள் மலத்துடன் கலந்து வெளிப்பட்டு மண்ணிலும் நீரிலும் விளையாட்டுச் சாமான்களிலும் பழங்களிலும் காய்கறிகளிலும் ஒட்டிக்கொள்கின்றன. இம் முட்டைகள் ஈக்களின் மூலமாகப் பல இடங்களுக்கும் பரவுகின்றன. ஒட்டுணிப் புழுக்களின் முட்டைகள் அழுக்குப் படிந்த கரங்களிலும் நகங்களுக்கு அடியிலும் தொத்திக் கொண்டு உடலுக்குள் சென்று விடுகின்றன.

சிலவகைப் புழுக்கள் பூனைகள், நாய்கள், வீட்டிலுள்ள இதர பிராணிகள் மூலமாக நம் உடலுக்குள் பரவுகின்றன. மலத்துடன் வெளிப்படும் இம் முட்டைகள் இம் மிருகங்களின் ரோமத்திலே ஒட்டிக் கொள்கின்றன. வீட்டிலுள்ள நாய்களுடனும் பூனைகளுடனும் விளையாடுவோர் கைகளை அவ்வப்பொழுது சுத்தமாகக் கழுவிக் கொள்ள வேண்டும். குழந்தைகள் கை கழுவிக்கொண்ட பிறகு தான் உணவு அருந்த வேண்டுமெனப் பழக்கப்படுத்திக் கொள்வது அவசியம். குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்கள் கழுவிச் சுத்தம் செய்யக் கூடியவையாக இருக்கவேண்டும். தினசரி ஒரு முறையேனும் அவற்றை வெந்நீரிலும் சோப்பிலும் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும்.

உங்கள் குழந்தைக்குக் குடல் கோளாறுகளும் பசியின்மையும் இரத்த சோகையும் இருப்பதாகத் தெரிந்தால் உடனே டாக்டரிடம் காட்டிப் புழுக்களுக்கான சோதனை செய்து பார்க்க வேண்டும். ஒட்டுணிப் புழுக்களுக்கான அறிகுறிகள் தென்பட்டால் புழு ஒழிப்பு சிகிச்சை அளித்தாக வேண்டும். உடலிலிருந்து இப் புழுக்களை அறவே அகற்றி விடுவதற்கான சக்தி வாய்ந்த சிகிச்சை முறைகள் இன்று நமக்குத் தெரியும். காலம் கடத்தாது சீக்கிரமே சிகிச்சையைத் தொடங்கினால் புழுக்களினால் குழந்தையின் உடலுக்கு அதிகத் தீங்கு ஏற்படாதபடி தடுத்திட முடியும் என்பதுடன், புழுக்களை அடியோடு ஒழித்திடுவதும் பன்மடங்கு சுலபமாயிருக்கும்.

'சோவியத் நாடு.'

# கொடை வள்ளல் ஆண்ட்ரூ கார்னகி

கொடை வள்ளல் ஆண்ட்ரூ கார்னகி 13-வது வயதில் அமெரிக்காவில் குடியேறியவர். அப்பொழுது அவர் சம்பாத்தியம் வாரத்துக்கு ஒரு டாலரும் 20 சென்டுமேயாகும். நடு வயதில் அவர் உலகத்தின் மிகப் பெரிய செல்வர்களுள் ஒருவரானார். எழுபதில் அவர் முப்பது கோடி டாலருக்கு மேல் வாரி வழங்கிய வள்ளலானார்.

அவர் பிறப்பு பிரிட்டனில் ஸ்காட்லாந்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில 1835 நவம்பர் 25-ம் தேதியாகும். அவர் தந்தையார் கைத்தறி நெசவாளர்; நெசவுக்கு நீராவிப் பொறி பயன்படத் தொடங்கியதும் இவர் தம் தறியை விற்றுவிட்டு மனைவியோடு 13 வயதுப் பையன் ஆண்ட்ரூ, 5 வயதுப் பையன் தாமஸ் இருவரையும் அழைத்துக் கொண்டு அமெரிக்காவுக்கு வந்து இன்று பிட்ஸ்பர்க் நகரின் ஒரு பகுதியாக விளங்கும் அலகனி என்னும் ஊரில் குடியேறினார். அங்கு பஞ்சாலை ஒன்றில் நூற்கண்டு எடுத்துக் கொடுக்கும் பையனாக ஆண்ட்ரூ கார்னகி வாரத்துக்கு 1·20 டாலர் ஊதியத்துக்கு வேலை செய்தார். இரண்டு ஆண்டு கழித்து பிட்ஸ்பர்க் நகரில் அவர் தந்திச் சேவகரானார். தந்தி அடிக்கும் முறை, வரும் தந்தியை வாசித்து எழுதும் முறை இவற்றை இவர் தாமே படித்துக் கொண்டார்; 17-வது வயதில் ஒரு டெலிபோன் ஊழியரானார்.

## செய்வன திருந்தச் செய்து

பிறகு ஓர் ரயில்வே கம்பெனியில் குமாஸ்தாவாகி, செய்வன திருந்தச் செய்து, புதுப் பொறுப்புகளை அஞ்சாது ஏற்று, பதவியில் படிப்படியாக உயர்ந்து 1860ல் அக் கம்பெனியின் ஒரு பகுதிக்கு மானேஜர் ஆனார்.

முதல் போட்டுப் பொருள் ஈட்டுவதிலும் இதற்குள் அவர் புலியாகி விட்டார். ரயில் வண்டிகளுக்குத் தூங்கும் பெட்டிகளைத் தயாரிக்கும் கம்பெனி ஒன்றில் அவர் பங்கு வாங்கினார். அவர் நினைத்தது போலவே நாட்டிலுள்ள இருப்புப் பாதைக் கம்பெனிகளெல்லாம் தூங்கும் பெட்டிகளை வாங்கிப் பயன்படுத்தவே, பங்குகளின் விலை ஏறிற்று. ஆண்ட்ரூ கார்னகி பெரும் செல்வம் பெற்றார்.

## முன் யோசனையுடன்

அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிந்ததும், இவர் கீஸ்டோன் பிரிட்ஜ் ஒர்க்ஸ் என்னும் பாலங் கட்டும் கம்பெனி ஒன்றைத் தொடங்கினார். மரப்பாலங்கள் மறைந்து இருப்புப் பாலங்களே நாடெங்கும் தோன்றும் என்று

அவர் எதிர்பார்த்தது போலவே நடந்தது. அவர் கம்பெனியே ஓஹையோ ஆற்றின் குறுக்கே முதன் முதல் இருப்புப் பாலம் கட்டியது. இரும்பு எளிதில் கிடைக்க வேண்டும் என்று கருதி அவர் 1868ல் இரும்பு ஆலை ஒன்றை நிறுவினார்.

அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு ஆண்ட்ரூ கார்னகியின் தொழில் வரலாறுதான் அமெரிக்காவில் தொழில் வரலாறாக இருந்தது. 1888-க்குள் பெரிய எஃகு ஆலை ஒன்றும், ஒரு இருப்புப் பாதைக் கம்பெனியும், ஒரு சிறு கப்பல் கம்பெனியும் அவருக்குச் சொந்தமாயின. 1899-க்குள் பிட்ஸ்பர்க்கில் இருந்த அநேக எஃகு ஆலைகளை ஒன்று சேர்த்து அவர் கார்னகி எஃகுக் கம்பெனியாக்கினார். 1901ல் அவர் தம் கம்பெனியை யு. எஸ். எஃகுக் கார்ப்பரேஷன் என்பதோடு இணைத்து எஃகு உற்பத்தியில் மிகப் பெரியதாக விளங்கும் அமெரிக்கக் கம்பெனியை உருவாக்கினார்.

இவ்வாறெல்லாம் தொழில் மிகச் சிறப்பாக நடந்துவரும் சமயத்தில் அதே ஆண்டில் அவர் ஓய்வுபெற முடிவு செய்தார். 50 கோடி டாலர் என மதிக்கப்பட்ட தமது சொத்தை உலகம் முழுவதும் மக்கள் குலநன்மைக்காகச் செலவிடவும் முடிவு செய்தார்.

"தேவை போக மீந்ததை ஆண்டுதோறும் பிறர் பணிக்குச் செலவிட வேண்டும்" என்று 1868-ம் ஆண்டிலேயே அவர் முடிவு செய்து விட்டார். "மக்கள் குல நன்மைக்காகத் தனது வாழ் நாளிலேயே செலவிட்டிருக்கக் கூடிய கோடிக் கணக்கான பணத்தை அவ்வாறு செலவிடாமல் விட்டுவிட்டு இறந்தால் இழிவு" என்று அவர் உறுதி பூண்டார்.

## வகை தொகை அறிந்து

1901 முதல் அவர் தம் பொருளை அள்ளிக் கொடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். வகை தொகையோடு தொழில் நடத்தியது போலவே வகைதொகையோடு வாரி வழங்கினார்.

1912-ம் ஆண்டில் மட்டும் 13 கோடி கொடுத்தார்; 1915-க்குள் 30 கோடிக்கு மேல் கொடுத்துவிட்டார்.

மக்கள் தம் கையே தமக்குதவி என முயற்சியுடன் வாழ அவர்களுக்கு உதவ வேண்டும் என்று, ஆண்ட்ரூ கார்னகி தமது செல்வத்தில் பெரும் பகுதியைக் கல்வி நிலையங்களுக்கும் விஞ்ஞானக் கழகங்களுக்கும் வழங்கினார். இவற்றில் பலவற்றை இவரே நிறுவினார். பள்ளிக் கூடங்களுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் கோடி கோடியாகக் கொடுத்தார்.

இவற்றிலெல்லாம் சிறப்பு வாய்ந்த பெருந்தொகை பொது நூலகங்களை வ[illegible]க்க உதவிய தொகையேயாகும். அமெரிக்

காவிலும் கனடாவிலும் ஆயிரக் கணக்கான ஊர்களில் பொது நூலகங்கள் இருப்பதற்கு இவ்வுதவியே பெரிதும் காரணம். கார்னகி காலமாவதற்குள், இந் நூலகங்களின் எண்ணிக்கை 2800 ஆயிற்று. இவற்றில் 800க்கு மேற்பட்டவை அமெரிக்காவுக்கு வெளியே இருந்தன. கிட்டத்தட்ட 6 கோடி டாலர் உதவியினால் உருவானவை இந்தக் கார்னகி பொது நூலகங்கள். இவற்றை அவருடைய பெருக்கும் வள்ளன்மைக்கும் மணி மண்டபங்கள் எனலாம்.

ஹாலந்தில் ஹேக் நகரில் உலக நீதி மன்றத்தின் இருப்பிடமாக விளங்கும் "அமைதி அரண்மனை" அவர் கொடையே அது சர்வதேசச் சட்ட நூலகமாக விளங்கும்படியும் அவர் அதை வழங்கினார். நாடுகளுக்கிடையே தோன்றும் தகராறுகளைப் பஞ்சாயத்துப் பேசியும் மற்றும் அமைதியான வேறு வழிகளிலும் தீர்க்க வேண்டும் என்பதற்காக அவர் சர்வதேச சமாதானத்துக்குரிய கார்னகி அறக்கட்டளை (ஒரு கோடி டாலர்) ஒன்றை நிறுவினார். கியூரி அம்மையார் நடத்திய ரேடியம் ஆராய்ச்சிக்கு உதவியாக கார்னகி 1,50,000 டாலர் கொடுத்தார்.

## உலகமெங்கும் உதவ

நியூயார்க்கின் கார்னகி கார்ப்பரேஷன் என்பதை 1911-ல் அவர் 12 கோடி டாலர் [illegible] ஏற்படுத்தினார். பின்னரும் தமது சொத்தில் பெரும் பகுதியை அவர் இதற்கு எழுதி வைத்தார். இதற்கு ஆண்டுதோறும் 50 லட்சம் டாலருக்கு மேல் வருமானம் வருகிறது. இதிலிருந்து இது பல மானியங்களை வழங்குகிறது. வெளிநாடுகளைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ளவும் அத்துறையில் வல்லவர்கள் ஆகவும் இந்நிலையம் அண்மையில் பெரிதும் ஆதரவளித்து வருகிறது. இந்தியாவில் வைத்திய ஆராய்ச்சித் திட்டங்கள், பொது சுகாதாரத் திட்டங்கள் பலவற்றுக்கு இந்நிலையம் மானியங்கள் வழங்கியுள்ளது. பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில் இந்தியாவைப் பற்றிய படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் இது ஏராளமாக உதவியுள்ளது.

## அள்ளிக் கொடுத்தார்

மொத்தத்தில் அறக் கட்டளைகளாக ஆண்ட்ரூ கார்னகி அநேக நிலையங்களுக்கு 31,15,94,230 டாலர் அளித்தார். இவற்றின் இன்றைய சொத்து 35 கோடி டாலர். அறக்கட்டளைகளின் வருமானத்திலிருந்து இவை நாளதுவரை 40 கோடி டாலருக்கு மேல் உதவி வழங்கியுள்ளன. அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் பல செல்வர்கள் கார்னகியின் கொடைத் திறத்தைக் கண்டு, தாமும் அவ்வாறு செய்ய முன்வந்துள்ளனர்.

பெரும்பாலும் எழுத்தாளர், விஞ்ஞானிகள், அரசியல் அறிஞர் முதலிய பெருமக்கள் பலர் கூறிய யோசனைகளின்படியே

கார்னகி தம் உதவியை எப்படி எப்படி வழங்குவதென்று முடிவு செய்தார்.

பிறர் உயிரைக் காப்பாற்றப் பொது மக்களில் ஒருவர் காட்டும் தீரச் செயலைப் பாராட்ட வேண்டும் என்று கருதி ஒரு கோடி டாலர் அறக்கட்டளை நியமித்து "கார்னகி தீரர் நிதிக் குழு" என்பது இவர் ஏற்படுத்திய திட்டம். இது அமெரிக்காவிலும் வெளி நாடுகளிலும் பலருக்குப் பதக்கம் வழங்குகிறது; அவர்களுக்காவது அவர்கள் பிள்ளைகள் முதலானோருக்காவது படிப்பு முதலிய வசதிகளுக்கும் அது பண உதவி செய்கிறது.

அமெரிக்காவில் 54 நகரசபைகள் அவரைப் பெரிதும் பாராட்டிச் சிறப்புச் செய்தன; பல கல்வி நிலையங்கள் கௌரவப் பட்டங்கள் அளித்துப் போற்றின. 1908-ல் இங்கிலாந்து மன்னர் எட்வர்டு பிரிட்டிஷ் பட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள இயலுமா என்று கார்னகியைக் கேட்டார்; ஜனநாயகக் கொள்கைக்கு அது ஒவ்வாது என்று கார்னகி வேண்டாம் என்று கூறிவிட்டார்.

கடைசியில் அவர் ஸ்காட்லாந்தில் வரலாற்றுச் சிறப்பமைந்த ஸ்கியோ மாளிகையை வாங்கி அங்கு, தம்மனைவியுடனும் மகளுடனும் குடியிருந்தார். 1919ல் 84-வது வயதில் அவர் காலமான போது, அவரது தனிச் சொத்து —50 கோடி டாலர்—2 கோடி 20 லட்சம் டாலராகக் கரைந்திருந்தது.

(அமெரிக்கன் ரிப்போர்ட்டர்)


" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்..
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்
முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.


Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.